தென்னிந்தியத் திருச்சபை

# மதுரை - இராமநாதபுரம் பேராயம்

# 2018-ம் ஆண்டு

## ஞாயிறு ஆராதனைகளில் பயன்படுத்தவேண்டிய சிறப்பு ஜெபங்கள், அருளுரைத் தலைப்புகள் மற்றும் தியானக் குறிப்புகள்

கிறித்தவக் கல்வித் துறை
கிறித்தவத் தொடர்புத் துறை

மதுரை–இராமநாதபுரம் பேராயம்

Published by Christian Education and Christian Communication Department of Diocese of Madurai and Ramnad under the project of CARDIA
(Congreation Accompanied Reformed Dikonia In Action)

Printed by
**Berachah Print Service,** Madurai - 625005.
Ph.+91-452-2484121; Mobile: +91-7667990722

**அன்புக்குரிய உடன் ஊழியர்களே,**

**'ஆசீர்வாதத்தின் ஆண்டாம்-2018'**-ல் உங்களை அன்புடன் வாழ்த்துவதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன்.

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதா வானவர் கனம்பண்ணுவார்"** (யோவான் 12:26) என நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். திருச்சபை மக்களாய் ஆண்டவரின் பிள்ளைகளை அவருக்குள் ளாக வழிநடத்தும் வாய்ப்பைப்பெற்ற நாம் யாவரும் பாக்கிய வான்கள்; கடவுளின் ஆசி பெற்றவர்கள். இந்த கனமான ஊழி யத்தைப் பெற்றுள்ள நாம் அதிக பக்தி வினயத்தோடும். மிகுந்த ஜெபத்தோடும் நாம் வழிநடத்தும் ஆராதனைகளையும், இறைச் செய்திகளையுளம் ஆயத்தப்படுத்தவேண்டும். இந்தியத் திருச் சபைகளின் ஐக்கிய அமைப்பு தயாரித்துள்ள கிரமமான தலைப்புகள், அனைத்தும் நமது ஆயத்தத்திற்கு உதவியாய் இருக்கவேண்டும் என்ற மேலான நோக்கத்தோடு, நமது பேராய கிறிஸ்தவக் கல்வித்துறை இதனை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

நமது ஆலய வழிபாடுகளில் இவைகளில் கொடுத்துள்ள திட்டத்தின்படி இறைமக்கள் கடவுளின் வழியில் நடக்க, தகுந்த ஆயத்தத்தோடு அவர்களை வழிநடத்துவோம், இக்கை யேட்டை தயாரிப்பதற்கு உதவிய, மொழிபெயர்த்த, அச்சிட்ட, யாவருக்கும் நன்றி கூறுகின்றேன். இதனை பயன்படுத்தும் யாவரையும் ஆண்டவர் ஆசீர்வதித்து, தமது ஆசீர்வாதத்தின் கருவிகளாய் பயன்படுத்துவாராக.

ஆண்டவர் இயேசுவின் ஆசியும், கிருபையும், சமாதானமும் உங்களை ஆட்கொள்வதாக!

அன்பர் இயேசுவின் திருப்பணியில்

**பேராயர் ம. ஜோசப்.**

# ஆசீர்வாதத்தின் ஆண்டு 2018

## ஜனவரி 1

ஆசீர்வதிக்கும் ஆண்டவர் - நம்மையும் நம்முடையவைகளையும் கொடுப்பதினால் ஆசீர்வாதம்

மல்கியா 3:6-12

- கடவுளோடு நம்மையும் நம்முடையவைகளையும் பகிர கடவுளே அழைப்பு விடுக்கிறார்.
- ஆலயத்திற்கு (திருச்சபை) வர அழைக்கும் கடவுள்
- நம்மையும் நம்முடையவை களையும் ஆலயத்தில் அர்ப்பணிக்க அழைப்பு பெறுகிறோம்.

மகிழ்விக்கும் மன்னா

**நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ? ... என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார் –மல்கியா 3:10.**

# ஜனவரி 7, 2018

## கடவுளின் அழைப்புக்கு ஏற்புடைய வாழ்வு

## Live worthy of Your calling

| | | |
|---|---|---|
| நீதிமொழிகள் 20:1-11 | : | ஒவ்வொரு மனிதரும் எப்படி இருப்பர்? |
| ரோமர் 6:12-21 | : | கடவுளுக்கு ஏற்புடைய வாழ்வு |
| மத்தேயு 7:16-23 | : | கடவுளின் திருவுளப்படி செயல்படுதலே முக்கியம் |
| சங்கீதம் 14 | : | இறைப்பற்று இல்லார் |

**சிறப்பு மன்றாட்டு:**

பரிசுத்தமுள்ள பிதாவே, எங்களைப் படைத்தவரே, உம்மால் அழைக்கப்பட்டதற்கேற்ப நாங்கள் வாழ உதவி செய்யும். எங்களுடைய அனுதின வாழ்க்கையில் நாங்கள் உம்முடைய நீதியின் பாதையில் நடக்கவும், எல்லாத் தீங்கினின்றும் விலகவும் எங்களுக்கு உதவி செய்யும். பாவத்தின் ஆளுகையில் இருந்து விலக்கிக்கொள்ளவும், உம்முடைய கிருபையின் ஆட்சிக்கு எங்களை ஒப்புவிப்பதிலும் நாங்கள் உறுதியாக இருக்க எங்களுக்கு பெலன் தாரும். நல்ல கனிதரும் ஒரு மரம்போல நாங்கள் இருந்து, உம்முடைய கண்களில் தயவு கிடைக்க வேண்டுமென்று என்றென்றைக்கும் தூய ஆவியரோடு ஆளுகை செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

மகிழ்விக்கும் மன்னா:

**கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் –கலா.5:24.**

# ஜனவரி 14, 2018

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு

## ஒரே கடவுள், ஒரே திருமுழுக்கு

## One Lord, One Baptism

| | |
|---|---|
| எண்ணாகமம் 11:23-30 | : எழுபதுபேரின் மேல் இறங்கும் கடவுளின் ஆவி |
| 1 கொரிந்தியர் 10:1-4 | : மேகத்தாலும் கடலாலும் திருமுழுக்கு பெற்ற முன்னோர் |
| யோவான் 10:7-18 | : ஒரே மந்தை ஒரே ஆயர் |
| சங்கீதம் 23 | : கடவுளே என் ஆயர் |

**சிறப்பு மன்றாட்டு:**

புதுவாழ்வு தரும் கடவுளே, நீர் மக்களை பரிசுத்தத்தாலும், நீதியாலும், சமாதானத்தாலும் சமத்துவத்தாலும், மறுபடைப்புச் செய்ய வாஞ்சிக்கிறீர். நாங்கள் உம்மால் தொடப்படவும், மன மாற்றமடையவும், நீர் எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த திரு முழுக்குக்காக நன்றி செலுத்துகிறோம். என்றென்றைக்கும் தூய ஆவியரோடு ஆளுகை செய்கிற ஒரே கடவுளின் மகனாகிய இயேசுகிறிஸ்துவின் நற்கிரியைகளால் தூய்மைப்படுத்தப்பட்டு புதிய மனிதர்களாக இருக்கிறோம் என்பதை உணர கிருபை செய்யும். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால்,**

**அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று,**

**மேய்ச்சலைக் கண்டடைவான் -யோவான் 10:9.**

# ஜனவரி 21, 2018

## பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு

## சமாதானம் நீதிக்கான ஒருமைப்பாடு
## Unity for Justice and Peace

| | | |
|---|---|---|
| எசேக்கியேல் 37:15-28 | : | ஒன்றாக்கும் கடவுள் |
| பிலிப்பியர் 4:8-20 | : | கற்றுக்கொள்ள வேண்டியவை |
| மத்தேயு 5:21-26 | : | கோபங்கொள்ளுதலும் ஒப்புரவாகுதலும் |
| சங்கீதம் 4 | : | கடவுளை நாடுதலும் அவரின் பாதுகாவலும் |

**சிறப்பு மன்றாட்டு:**

சமாதானப் பிரபுவாகிய தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய பாவமீட்பிற்காக அனுப்பி வைத்த, நீதிக்கும் சமாதானத்துக்குமுரிய கடவுளே, நாங்கள் செய்கிற எல்லா செயல்களிலும், எங்களுடைய கணிப்பு உம்முடைய சமாதானத்தின் இராஜ்யத்தை உருவாக்குவதிலும், வருகின்ற நியாயாதிபதிக்காக காத்திருப்பதிலும், எங்களை பலப்படுத்தும்படி என்றென்றைக்கும் தூய ஆவியரோடு ஆளுகை செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கி றோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து -மத்தேயு 5:24.**

# ஜனவரி 28, 2018

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 9-வது ஞாயிறு

## படைப்பின் அருமை

## The Goodness of Creation

ஆதி.1:24-31 : நன்றாயிருக்கும் கடவுளின் படைப்பு

எபே.1:3-14 : மீட்பு - கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்தல்

மத்.6:9-13 : ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல்

சங்.104:1-13 : படைப்பின் மேன்மை

**சிறப்பு மன்றாட்டு:**

உம்முடைய சாயலில் எங்களைப் படைத்து, இயேசுகிறிஸ்துவில் எங்களை மீட்ட படைப்பின் கடவுளே! வாக்குறுதிப் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியரால் எங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும். உம்முடைய இரக்கத்தின் ஐசுவரியத்தினால் எங்கள் மீறுதல்களை மன்னித்து எல்லாப்படைப்புகளோடும் எங்களை ஒருமைப்படுத்தும். படைப்புகளின் பிரதானமான நாங்கள் உம்முடைய படைப்பின் நன்மைகளை நினைத்துப் போற்றவும், உம்முடைய படைப்பின் கைவண்ணத்தையும், அதின் மகிமையையும் பறைசாற்றவும் எங்களுக்கு அருள் புரியும். சகலத்தையும் நன்மையாகவே படைத்து, இப்பொழுதும், என்றென்றைக்கும் உம்முடைய தூய அன்பில் எங்களை தாங்குகிற பரிசுத்த ஆவியரில் எல்லாப் படைப்புகளையும் மீட்ட இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம்.

மகிழ்விக்கும் மன்னா:

**அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றை யும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது -ஆதி.1:31.**

# பிப்ரவரி 1, 2018

## தன்னிலை வெறுப்பதினால் ஆசீர்வாதம்

2 கொரிந்தியா 4:1-15

- கிறிஸ்து இயேசுவே சுவிசேஷம்
    - அவரின் மரணம்
    - அவரின் உயிர்த்தெழுல்
- கிறிஸ்து இயேசுவிற்காக பாடுபடுதலே சுவிசேஷம்

மகிழ்விக்கும் மன்னா

**கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி உங்களுடனேகூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம் –2 கொரிந்தியர் 4:14.**

# பிப்ரவரி 4, 2018

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 8-ம் ஞாயிறு

## படைப்பின் வீழ்ச்சி

## The Fallen-ness of Creation

| | |
|---|---|
| ஆதி.3:1-10 | : மனிதரின் மீறுதல் |
| ரோமர் 3:21-26 | : எல்லாரின் பாவத்தின் விளைவும், கடவுள் ஏற்கும் முறையும் |
| மத்.18:23-35 | : மன்னிக்க மறுத்த பணியாள் உவமை |
| சங்.53 | : கடவுளை நாடுபவர் இல்லை |

**சிறப்பு மன்றாட்டு:**

இழந்து போனவர்களை தேடிக்கொண்டு இருக்கும் நீதியின் கடவுளே, நீதியும் நேர்மையுமான வாழ்க்கையை வாழும்படி எங்களை மாற்றியருளும். வாழ்க்கையில் சாதாரண காரியங் களால்கூட நாங்கள் சோதிக்கப்பட்டு வீழ்ந்துவிடாதபடி நீர் உம் மோடு எங்களை நெருக்கிச் சேர்த்துக்கொள்ளும். நீர் எப்படி எங் களுடைய பாவங்களை மன்னித்தீரோ அதேபோல் எங்களுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களை நாங்கள் மன்னிக்க எங் களை ஊக்கிவிடும். எங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நாங்கள் உமது அன்பின் திருவுருவமாக தொடர்ந்து மாற்றிய மைக்கப்படவும், உம்மைத்தேடிப் பின்தொடரவும், உமது ஞானத்தால் எங்களைத் தாங்கும்படி எங்கள் மீட்புக்காக தம் மையே ஜீவபலியாகக் கொடுத்து தூய ஆவியரோடு என்றென்றும் ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசுகிறிஸ்துவின் வழி யாய் வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள் -ரோமர் 3:23,24.**

# பிப்ரவரி 11, 2018

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 7-ம் ஞாயிறு

### லெந்துகாலம்: ஒப்புரவாகுதலின் காலம்

### Lent: A time of Reconciliation

| | |
|---|---|
| ஆதி.45:1-5 | : யோசேப்பு தன் சகோதரருக்கு தன்னை தெரியப்படுத்துகிறார். |
| எபே.2:11-22 | : பகையாகிய நடுச்சுவரை தகர்த்த சிலுவை |
| யோவான் 2:1-11 | : கானாவில் திருமணம் |
| சங்.85 | : கடவுளின் மன்னிப்புக்கான மன்றாட்டு |

**சிறப்பு மன்றாட்டு:**

இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்களை நேசித்த இரக்கமுள்ள கடவுளே, நாங்கள் உருவாக்கிக்கொண்ட தடுப்புச்சுவர்களையும், எல்லைக் கோடுகளையும் கடந்து, உம்மோடும், எல்லா மக்களோடும் எல்லா படைப்புகளோடும் ஒப்புரவாக நாங்கள் தயார் நிலையில் இருக்கவேண்டிய மன தைரியத்தைக் கொடும். எங்களையும், எல்லாப் படைப்புகளையும், ஒப்புரவாக்கிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையை புதிய கண்ணோட்டத்தோடு நாங்கள் பார்க்க இந்த லெந்துகாலம் எங்களைப் புத்துணர்ச்சிப்படுத்த கிருபை செய்யும். ஒப்புரவாகுவதற்குரிய வாய்க்கால்களாக நாங்கள் மாறுவதற்கு உம்முடைய பரிசுத்த ஆவியினால் எங்களைப் பெலப்படுத்தும். இவைகளை உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் –எபேசியர் 2:13.**

# பிப்ரவரி 14 புதன், 2018

## சிலுவை: தன்னைத் தான் வெறுக்க அழைப்பு

(சாம்பற் புதன்கிழமை)

## CROSS: A Call to Self Denial

| | |
|---|---|
| யோவேல் 2:12-20 | : மனம் மாற அழைப்பு |
| கலாத்தியர் 2:15-21 | : கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்ட வாழ்க்கை |
| லூக்கா 9:23-27 | : இயேசு தம் சாவை அறிவித்தல் |
| சங்கீதம் 32 | : மன்னிப்பு பெற்றவரே பாக்கியவான் |

**சிறப்பு மன்றாட்டு:**

ஜீவனுள்ள கடவுளே தகுதியற்ற எங்களை நீர் உமது பிள்ளைகள் என்று அழைக்கிறீர். நாங்கள் அல்ல, நீரே எங் களுக்குள் வாழ்கிறீர் என்பதை நாங்கள் மறந்துவிட்டோம். இயேசுகிறிஸ்து தன்னை ஒரு பொருட்டாக நினைத்து பிதாவுக்கு இணையாக கருதாமல் தன்னை வெறுமையாக்கினார். இப்படியி ருக்க மனித பலவீனம் கிறிஸ்துவை மையமாக வைத்து வாழா மல் எங்களையே மையமாக வைத்து வாழும்படி செய்துவிட்டது. எங்களை நாங்களே வெறுக்க உம்முடைய ஞானத்தைத் தாரும். சிலுவையை சுமந்த உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து வைப் பின்பற்ற தைரியத்தைத் தாரும். இவைகளை உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான் -லூக்கா 9:24.**

# பிப்ரவரி 18 ஞாயிறு, 2018

## லெந்து காலத்தில் முதல் ஞாயிறு

## தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்படுகிறவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல்

## Touching the Untouchable

| | | |
|---|---|---|
| 2 இரா.5:1-10 | : | தொழுநோயாளி நாகமான் |
| எபி.13:8-17 | : | பாளையத்திற்கு புறம்பே பாடுபட்ட இயேசுவிடம் போவோம் |
| மத்.8:1-4 | : | சித்தமானால் சுத்தமாக்கும் |
| சங்.10:1-12 | : | எளியோரின் நீதிக்கான மன்றாட்டு |

**சிறப்பு மன்றாட்டு:**

சமத்துவத்தின் கடவுளே, எங்களை உம்முடைய சாயலில் படைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் உருவாக்கிய சாதிகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள், நிறத்தின் அடிப்படையில் பிரிவினைகள், இவற்றின்மூலம் உம்முடைய சாயலை நாங்கள் உருக்குலைத்துவிட்டோம். உம்முடைய திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்து தீண்டத்தகாதவர்களை அரவணைத்ததாலும், அங்கீகாரம் இல்லாத மக்களை அங்கீகாரப்படுத்தியதினாலும், சமுதாயத்தில் பேசப்படாத மக்களோடு பேசி உறவாடியதாலும் விடுதலையின் அனுபவத்தை கொடுத்தார். இதற்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். தங்களது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையின் முழுமையை நாங்கள் உறுதிசெய்ய எங்களுக்கு பெலனைத் தாரும் என்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப்**

பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம் -எபிரேயர் 13:12,13.

# பிப்ரவரி 25 ஞாயிறு, 2018

## லெந்துகாலத்தில் 2-ம் ஞாயிறு

## வாழ்வைக் காக்கும் நம்பிக்கை
## Life Saving Faith

2 இரா.4:1-7 : எலிசாவும் ஏழை விதவையும்

அப்.5:12-14 : ஆண்டவர்மீது நம்பிக்கைக்கொண்ட மக்கள்

லூக்.5:17-26 : திமிர்வாதக்காரன் பெற்ற சுகம்

சங்.22 : கடவுள் மீதான நம்பிக்கை ஆனாலும் புலம்பல்

**சிறப்பு மன்றாட்டு:**

எமது வாழ்க்கையின் காரணக் கர்த்தாவே, வாழ்க்கை பாதுகாப்பின் அமைப்புகளை உருவாக்க நாங்கள் இயக்கமூட்டும் வலிமை பெற்றவர்களாக இருக்கும்படி எங்களை அழைத்திருக்கிறீர். தேவையில் இருப்பவர்களுக்கும் நலிந்த மக்களுக்கும், வியாதியில் இருப்பவர்களுக்கும் ஆறுதலாகவும், உமது குணப்படுத்தும் வல்லமையின் வாய்க்கால்களாகவும் இருக்க எங்களுக்கு உயிர்காக்கும் நம்பிக்கையைத் தாரும். நாங்கள் எல்லோரும் வாழ்க்கையின் முழுமையை அனுபவிக்கும அனுபவத்தில் எங்களைச் சுற்றியுள்ள சிறியோரின் தேவைகளை பூர்த்தி செய்யவும், அவர்களை உம்மிடத்தில் கொண்டுவரவும், எங்களை அர்ப்பணிக்கும்படி பலப்படுத்தும். இவைகளை உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசுகிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமை யானவனையும் அவர் விடுவிப்பார் -சங்கீதம் 72:12.**

# மார்ச் 1

## மன்னிப்பதனால் ஆசீர்வாதம்

லூக்கா 7: 37 -50

- குஷ்டரோகியாயிருந்த சீமோனும் பாவியான பெண்ணும்
- அதிகமான மன்னிப்பு அதிகமான அன்பு
- மன்னிப்பினால் பெருகும் அன்பு

மகிழ்விக்கும் மன்னா

**எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் ... இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது: இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே -லூக்கா 7:43,47.**

## மார்ச் 4, ஞாயிறு, 2018

### லெந்துகாலத்தில் 3-வது ஞாயிறு

### ஜெபத்தில் உறுதியாயிருத்தல்

Persistence in Prayer

| | |
|---|---|
| 2 இரா.20:1-11 | : எசேக்கியா அரசரின் ஜெபமும் நோய் குணமாதலும் |
| 1 தெச.5:12-21 | : பவுலடிகளாரின் பொதுவான அறிவுரைகள் |
| மாற்கு 7:24-30 | : கானானியப்பெண்ணின் உறுதியான மன்றாட்டு |
| சங்.116 | : ஜெபத்தினால் மரணப்பிடியிலிருந்து தப்பியவர் பாடல் |

**சிறப்பு மன்றாட்டு:**

படைப்பின் கடவுளே, உமது அறிவும், ஞானமும் மனிதனுடைய எல்லாக் கற்பனைக்கும் புரிதலுக்கும் அப்பாற்பட்டது. நீர் எங்களுக்கு பாதைகளை வகுத்து வைத்திருந்தாலும் நாங்கள் எங்கள் வழிகளையேப் பின்பற்றினோம். இதனால் படைப்பிலுள்ள உறவுகளும், சக மனிதர்களுக்குள் உள்ள உறவுகளும் சிதைக்கப்பட்டுவிட்டது. உமது வழிகாட்டுதலை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. ஜெபத்தில் தரித்திருக்கவும், நம்பிக்கையில் உறுதியாய் இருக்கவும், பிறருக்கு சேவை செய்வதில் பொறுப்போடு இருக்கவும், இதன்மூலமாக நாங்கள் உம்மோடு ஒன்றாக இணையவும் உதவிசெய்யும். உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் -1 தெச.5:16-18.**

# மார்ச் 11, ஞாயிறு, 2018

## லெந்துகாலத்தில் 4-வது ஞாயிறு

## விடுதலையாக்கும் உண்மையான வழிபாடு
## True Worship that Liberates

யாத்.3:11-18 : இஸ்ரேல் மக்களை விடுதலையாக்க மோசேயை அழைக்கும் கடவுள்

அப்.16:25-34 : சிறையாக்கப்பட்ட பவுல் சீலாவினால் விடு தலையாக்கப்பட்ட சிறைக்காவலர்

லூக்.13:10-17 : 18 ஆண்டுகளாகக் கூன் விழுந்தவரின் விடுதலை

சங்.137 : சிறைப்பட்டுப் போனவர்களின் புலம்பல்

**சிறப்பு மன்றாட்டு:**

விடுதலையின் கடவுளே, எல்லாவிதமான அடிமைத்தனங்களிலும், ஒடுக்குதலிலும் இருந்து எங்களை விடுவிக்க உம்முடைய ஒரே திருமகனாகிய இரட்சகர் இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். மனித சமூகத்தை அடிமைப்படுத்தி தங்கள் சுயநலத்திற்காக எங்களைப் பயன்படுத்துகிற அதிகார வர்க்கத்தை எதிர்த்து நிற்க எங்களுக்கு பலன்தாரும். அநீதியாலும், பேராசையாலும், பாதிக்கப்பட்ட மக்களை விடுதலையாக்கும். உமது சிறந்த பணியை தொடர்ந்துசெய்ய எங்களைப் பலப்படுத்தி உறுதிப்படுத்தும். எங்களுடைய தினவழிபாட்டின் மூலம் பரிசுத்த ஆவியின் ஆற்றலை நாங்கள் அனுபவித்து தெய்வீக சுதந்தரத்தையும் விடுதலையையும் அடைய எங்களைப் பலப்படுத்தும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**எருசலேமே, நான் உன்னை மறந்தால் என்**

**வலது கை தன் தொழிலை மறப்பதாக -சங்.137:5.**

# மார்ச் 18, ஞாயிறு, 2018

## லெந்துகாலத்தில் 5-வது ஞாயிறு

## சிலுவை: மேசியாவின் காலத்தைக் குறித்து ஒரு புதிய பார்வை

## Cross: A new Version of the Messianic Age

உபா.18:15-22 : இறைவாக்கினர் குறித்த வாக்குறுதி

2 கொரி.1:3-11 : துன்பத்திலும் கடவுளின் மீது நம்பிக்கை

லூக்.18:35-43 : பார்வை பெறும் பார்வையற்றவர்

சங்.73 : கடவுளின் நீதி முறை

**சிறப்பு மன்றாட்டு:**

எங்கள் பிதாவாகிய கடவுளே, உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து, மனுக்குலத்திற்காக அவர் செய்யாத குற்றங்களுக்காக பாடுகளை ஏற்றுக்கொண்டார். எங்களுடைய மீறுதல்களுக்காக வும், பாவங்களுக்காகவும் அவர் சிதைக்கப்பட்டு புண்படுத்தப் பட்டார். எங்களுடைய பாவமிகுந்த வாழ்க்கையிலிருந்தும், எங்களது பரிதாபமான நிலைமையிலிருந்தும் எங்களைச் சுத்திகரிக்க அவர் குற்றவாளியாக தீர்க்கப்பட்டார். நாங்கள் மீட்பின் வாழ்வை அடைவதற்காகவே மரித்தார் என்பதை சிலுவை எங் களுக்குத் தொடர்ந்து நினைவூட்டுகிறது. நேர்மைக்காகவும், நீதிக் காகவும், சமாதானத்துக்காகவும் நாங்கள் பாடுபட உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது -2 கொரி.1:5.**

# மார்ச் 25 ஞாயிறு, 2018

## குருத்தோலை ஞாயிறு

## ஓசன்னா: ஆலயத்தில் புதிய அரசர்
## Hosanna: New King in the Temple

| | |
|---|---|
| ஏசா.56:1-8 | : ஆண்டவரின் இல்லம் அனைவருக்குமான ஜெபவீடு |
| 1 கொரி.3:16-23 | : நீங்களே கடவுளின் ஆலயம் |
| மத்.21:1-17 | : இயேசுவின் எருசலேம் நுழைவும் ஆலயத் தூய்மையும் |
| சங்.24 | : மகிமை மிகு அரசரின் வருகை |

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களுக்கு விடுதலையளிக்கும் கடவுளே, உம் குமாரனாகிய இயேசுகிறிஸ்து ஒரு தொண்டு செய்யும் கடவுளாக இவ்வுலகில் தோன்றியது, அவர் எல்லா அதிகாரங்களையும் ராஜரீகங்களை யும் வென்றுவிட்டார் என்பதற்கு ஆணித்தரமான ஓர் அடை யாளம் ஆகும். அவர் வருகையின் மூலம் ஆலயத்தைத் தூய் மைப்படுத்தினார். பிதாவே, தெய்வபக்தியில்லாமையை எங்களி டத்திலிருந்து நீக்கி, மனந்திரும்புதலோடு மகிழ்ச்சியைக் காண உம்மிடத்தில் திரும்பும்படி எங்களுக்கு உதவும். இயேசு கிறிஸ்துவே சபைகளை ஆண்டுகொள்ளும்படி உம்மிடத்தில் கெஞ்சுகிறோம். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள், அநாதி கதவுகளே, உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார் –சங்.24:9.**

# மார்ச் 29, வியாழன், 2018

## கட்டளை வியாழன்

## இயேசுவின் இறுதி இராவுணவு - இயேசுவை நினைவு கூறுதல்

## Eucharist: The Re-membering Jesus

யாத்.12:1-17 : பாஸ்கா கடந்து செல்லல்

1 கொரி.11:23-34 : ஆண்டவரின் திருவிருந்து

மத்.26:17-30 : இயேசுவின் இறுதி உணவு-பாஸ்கா

சங்.116 : சாவிலிருந்து தப்பியவர் பாடியது

**சிறப்பு மன்றாட்டு:**

இயேசு கிறிஸ்துவின்மூலம் எங்களை இரட்சித்தக் கடவுளே, உம்முடைய விடுவிக்கும் பணியில் நாங்கள் எங்களை இணைத்துக்கொள்ள ஊக்குவியும். எங்களுக்கு பரிபூரண வாழ்க்கையை அளிக்கவேண்டுமென்று எப்படி கிறிஸ்து அன்பை எங்கள்மீது பொழிந்தாரோ அதேபோல் நாங்களும் எங்கள் இருதயத்தைத் திறந்து எங்களையே பிறருக்கு தியாகம் செய்யக்கற்றுத்தாரும். தன்னையே தியாகம் செய்வதற்கு அடை யாளமான உம்முடைய வாழ்க்கையை நாங்கள் வாழ்வதற் குரிய தைரியத்தையும் பெலனையும் எங்களுக்குத் தந்து உம் முடைய திருமகனுடைய சிலுவையை நாங்கள் நினைவு கூறவும் எங்களுக்கு உதவும். இவைகளை உம்மோடும் தூய ஆவிய ரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

# மார்ச் 30 வெள்ளி, 2018

## பெரியவெள்ளி

## சிலுவை: சாவின் சாவு

Cross: Death of Death

| | |
|---|---|
| எண்.21:1-9 | : வெண்கலப்பாம்பு |
| 1 கொரி.15:50-58 | : மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது |
| மத்.27:1-56 | : இயேசுவின் சாவு |
| சங்.22 | : கடவுள் மீதான நம்பிக்கை |

**சிறப்பு மன்றாட்டு:**

இரக்கமுள்ள கடவுளே, படைப்புகளின் மேல் நீர் வைத்த அன்பின் காரணமாக உம்முடைய குமாரனாகிய இயேசுவின் மரணத்தாலும், உயிரத்தெழுதலினாலும் மரணத்தையே நீர் வென்றீர். தன்னையே தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பின்பற்றி நாங்களும் பிறருக்காக அன்பைப் பொழிய எங்களைத் தகுதிப்படுத்தும். எங்களுடைய வாழ்க்கையில் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியைக் காண எங்களுக்கு விழிப்பூட்டும். இவைகளை நாங்கள் நலிந் தோர்க்கு துணையாக இருக்கும் பரிசுத்த ஆவியாரின் துணை கொண்டு சிலுவையில் சாவை மிதித்துக்கொன்ற கிறிஸ்துவின் வழியாக இந்த உலகத்திற்கு தன் குமாரனை அனுப்பின கடவுளிடம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

# ஏப்ரல் 1 ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாள்

## மீட்பின் மகிழ்ச்சியைக் கொண்டாடுதல்

## Resurrection: Celeorating the Joy of Salvation

யாத்.14:5-31 : இஸ்ரயேலரின் மீட்பும் செங்கடலைக் கடத்தலும்

கொலோ.3:1-11 : புது சாயல்

மத்.28:1-10 : இயேசுவின் உயிர்த்தெழுதல்

சங்.118:14-29 : கடவுளே என் மீட்பு

**சிறப்பு மன்றாட்டு:**

துவக்கமும் முடிவுமில்லாத எக்காலத்திலும் எங்கள் வாழ்வின் அடிப்படையாக உள்ள கடவுளே, இந்த முழு உலகின்மீது நீர் வைத்திருக்கிற முடிவில்லா அன்பிற்காக நாங்கள் உம்மைப் போற்றி நன்றி செலுத்துகிறோம். தமது மரணத்தின் மூலமும் உயிர்த்தெழுதலின் மூலமும் உம்முடைய படைப்புகளை எல்லாம் இரட்சிக்கும்படி உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பாவத்தின் தீமைகளை சிலுவையில் உடைத்தெறிந்து, இயேசுவை சாவிலிருந்து எழுப்பி, அவரை இரட்சிப்பின் வெகுமதியாக எங்களுக்குத் தந்த உமது நல்வாழ்வு தரும் வலிமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது படைப்புகளோடு எங்கள் வாழ்க்கையை தொடர்ந்து கொண்டாட எங்களைப் பலப்படுத்தும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் -கொலோ.3:1.**

# ஏப்ரல் 8, ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

## உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் சந்தித்தல்

## Encounter with the risen Lord

| | |
|---|---|
| ஆதி.32:22-32 | : யாக்கோபின் யாப்பொக்கு நதிக்கரை அனுபவம் |
| அப்.9:1-18 | : தமஸ்குவில் சவுல் இயேசுவை எதிர்கொள்ளல் |
| யோவான் 20:24-29 | : உயிர்த்தெழுந்த இயேசு தோமாவுக்குக் காட்சியளித்தல் |
| சங்.40 | : கடவுளின் எதிர்பார்ப்பும் கடவுள் மீதான நம்பிக்கையும் |

**சிறப்பு மன்றாட்டு:**

மனிதனின் வாழ்க்கைப் பாதையில் இடைபடுகிற எங்கும் நிறைந்த கடவுளே, பவுலையும், யாக்கோபையும் அவர்கள் சென்ற பாதையில் இடைபட்டவரே, உம்முடைய சித்தத்துக்கு விரோதமாக நாங்கள் போகும்போது எங்களை சந்தியும். நாங்கள் உமக்கு சாட்சியாக இருக்க எங்களை மாற்றியமைத்து மனிதரால் உண்டாக்கப்பட்ட பிரிவினைகளின் எல்லைக்கோடுகளைக் கடந்து நாங்கள் செல்லவும், சமாதானத்துக்கும் ஒப்புவராக்குதலுக்கும் ஏற்ற முன்னோடிகளாக நாங்கள் இருக்கவும், வேண்டுமென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியராகிய ஒரே கடவுளிடம் வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான் -ஆதி.32:26.**

# ஏப்ரல் 15, ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு

## உயிர்த்தெழுந்த ஆண்டவரை
## பணித்தளங்களில் அடையாளம் காட்டுதல்

## Identifying Risen Lord in the Work Place

| | |
|---|---|
| ரூத் 2:1-18 | : ரூத்திடம் கடவுள் தன்மையை வெளிப்படுத்திய போவாஸ் |
| அப்.9:36-43 | : உயிர்பெற்ற தபீத்தாள் |
| யோவான் 21:1-14 | : உயிர்த்தெழுந்த இயேசு மீன்பிடிக்க போனபோது தம் சீடருக்கு காட்சியளித்தல் |
| சங்.15 | : கடவுளின் எதிர்பார்ப்பு |

**சிறப்பு மன்றாட்டு:**

பணித்தளங்களில் எங்களை சந்திக்கிற கடவுளே, உம்மோடு எங்களை அடையாளம் காட்டிக்கொள்ள உதவி செய்யும். கடல் கொந்தளிப்பின் நடுவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சீடர்கள் உம்மை அடையாளம் கண்டுகொண்டதுபோல நாங்களும் எங்கள் பணித்தளங்களில், எங்களோடு பணிசெய்கிற பிற மக்களிடத்தில் உமது ஒளிமயமான பிரசன்னம் இருப்பதை காண எங்களுக்கு உதவிசெய்யும். எங்களைச் சுற்றியிருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களையும் நாங்கள் அரவணைத்து அவர்கள்மீது அன்பு காண்பிக்க உதவி செய்யும். இதன்மூலம் எங்கள் பணித்தளங்களில் அவர்கள் அடைக்கலத்தையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற கிருபை செய்யும். இவைகளைத் தொடர்ந்து பணித்தளங்களில் எங்களைச் சந்திக்கிற இயேசு கிறிஸ்துவின் மூலமாக வேண்டிக்கொள்கிறோம் எங்கள் கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக.**

**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்**

**-ரூத் 2:12.**

# ஏப்ரல் 22 ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 3-வது ஞாயிறு

## உயிர்த்தெழுதலின் அனுபவத்தில் உருவாகும் சமுதாயம்

## Community formation around resurrection experience

ஏசா.25:1-9 : கடவுள் தரும் விருந்தும் புதிய நிலையும்

அப்.4:32-37 : எல்லாருக்கும் எல்லாம் என்ற புதிய சமுதாயம்

லூக்.24:13-35 : எம்மாவுர் வழியில் சீடர் பெற்ற அனுபவம்

சங்.126 : கடவுள் தரும் மாற்றங்கள்

**சிறப்பு மன்றாட்டு:**

ஒற்றுமையான சமூகங்களை அமைக்கவேண்டுமென்று எங்களுக்கு அறிவிக்கிற உயிர்த்தெழுந்த கடவுளே, ஒன்றுபடு தலையும் பகிர்ந்துகொள்ளுதலையும் செய்வதற்கு எங்கள் மனதைப் பக்குவப்படுத்தும். சகோதரத்துவத்தையும் பகிர்ந்து கொள்ளும் மனப்பாண்மையையும் எங்கள் இருதயத்தில் பதியச்செய்யும். எங்களுடைய சுயநலத்தை மாற்றி, பின்தங்கிய தேவையுள்ள மக்களோடு நாங்கள் சமபந்தி கொள்ள எங்களை மாற்றியருளும். சமூக ஒருமைப்பாட்டுக்காக நாங்கள் நற்செய்தி யைப் பகிர்ந்துகொள்ளவும், ஏழைகளுக்கு நாங்கள் அடைக்கல மாக இருக்கவும் எங்களுக்கு உதவிச்செய்யும். எங்கள் மத்தியிலே நாங்கள் உம்மை அடையாளம் கண்டுகொள்ள எங்களுக்கு ஞானத்தைத் கொடுத்து உற்சாகப்படுத்தும். இவைகளை உம் மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள் கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அவர்கள் ஜெபம் பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது.**

அவரகளெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள் –அப்.4:31.

# ஏப்ரல் 29 ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 4-வது ஞாயிறு

## உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் நம்பிக்கை

## Believing in Christ: The Resurrection

| | |
|---|---|
| 2 இரா.4:27-37 | : சுனேமித்தியாளின் மகன் உயிர்பெறுதல் |
| அப்.26:12-23 | : தன்னைச் சந்தித்த இயேசுவைப்பற்றி சான்று பகரும் பவுலடிகள் |
| யோவான் 11:17-28 | : லாசரு உயிர்பெற்று எழுதல் |
| சங்.90 | : கடவுளே நிலையானவர் |

**சிறப்பு மன்றாட்டு:**

எல்லாம் வல்ல கடவுளே, இயேசு கிறிஸ்துவை நீர் உயர்த்தி, மகிமைப்படுத்தி எல்லோருக்கும் பிரபுவாக்கினீர். உயிர்த்தெழுதலுக்கும் நித்திய வாழ்விற்கும் ஊற்றாயிருக்கிற இயேசு கிறிஸ்வில் நாங்கள் நம்பிக்கை வைக்க எங்களுக்குத் தைரியம் தாரும். எங்களுடைய வார்த்தைகளாலும் செயல்களாலும் இயேசு கிறிஸ்துவின் விடுவிக்கும் சக்தியை நாங்கள் சாட்சி பகிரவும், உலகிற்கு பறைசாற்றவும் எங்களுடைய அவநம்பிக்கையை வெற்றிக்கொள்ள எங்கள் கண்களைத் திறந்து உதவி செய்யும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**தீர்க்கதரிசிகளும், மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுய ஜனங்களுக்கும், அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்து கிறவரென்றும், சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான் –அப்.26:23.**

# மே 1, செவ்வாய் 2018

ஜெபிப்பதனால் ஆசீர்வாதம்

-மத்.7:7-12

- மனிதனின் குணங்களும் கடவுளின் குணங்களும்.
- கேட்பதினாலே கிடைக்கும்



**பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத்தேயு 7:11**

# மே 6 ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 5-வது ஞாயிறு

## அருள்பணிக்கு கிறிஸ்துவின் அழைப்பு

## Christs Invitation t0 be an Expression of Mission

| | |
|---|---|
| எசே.34:25-31 | : ஆண்டவரே நல்ல ஆயர் |
| 1 பேதுரு 2:1-10 | : நீங்களே தேர்ந்தெடுக்கப்பட்ட உயிருள்ள கற்கள் |
| யோவான் 20:19-23 | : மன்னிக்க அழைக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் |
| சங்.47 | : கடவுளே உலகின் அரசர் |

**சிறப்பு மன்றாட்டு:**

இரக்கமும், அக்கறையுமுள்ள கடவுளே, மன்னிப்பும் இரக்கமும் காண்பிக்கிற அருட்பணியில் நாங்கள் நிலைத்திருக்கும்படி உம்முடைய கட்டளைகளை பின்பற்றவும், நீர் எங்கள் சபையின்மேல் பரிசுத்த ஆவியின் வல்லமையை ஊற்றியதற்காக நாங்கள் உம்மைத் துதித்து நன்றி சொல்லுகிறோம். நீதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தவும், உம்முடைய திருப்பணியின் வெளிப்பாடாக நாங்கள் இருக்கவும், உமது குமாரனும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் எங்களை அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய வீட்டில் நாங்கள் நிலையான கற்களாக நிற்கவும், உம்முடைய புனிதமான போதக ஊழியத்திற்கு எங்களையே அர்ப்பணம் செய்யவும் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**வெளியின் விருட்சங்கள் தங்கள் கனியைத் தரும், பூமி தன் பலனைக் கொடுக்கும், அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள், நான் அவர்கள் நுகத்தின் கயிறுகளை அறுத்து, அவர்களை அடிமை கொண்டவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள் –அப்.4:31.**

# மே 13 ஞாயிறு, 2018

## உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு

## தூய ஆவியருக்காகக் காத்திருத்தல்

## Waiting upon the Holy Spirit

| | | |
|---|---|---|
| ஏசா.40:25-31 | : | கடவுளுக்கு நிகரானவர் யார்? |
| அப்.1:1-11 | : | தூய ஆவியரைப் பற்றிய வாக்குறுதி |
| லூக்.24:44-49 | : | திருமறை வாக்குகள் நிறைவேறியது என இயேசு கூறல் |
| சங்.51 | : | தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும் |

**சிறப்பு மன்றாட்டு:**

மிக உன்னதமான கடவுளே, பரிசுத்த ஆவியருக்காக காத்திருந்த உம்முடைய சீடர்களின்மேல் உம்முடைய ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பொழிந்தீர். எங்களது வாழ்க்கையின் பல குழப்பங்களுக்கு மத்தியில் எங்களை பலப்படுத்தி, உற்சாக மூட்டித் தாங்குகிற பரிசுத்த ஆவியரின் ஆசீர்வாதங்களுக்காக நாங்கள் தாழ்மையோடு காத்திருக்கிறோம். உலகின் கடையாந்தரங்கள்வரை உம்முடைய சுவிசேசத்தை அறிவிக்க பரிசுத்த ஆவியரால் நாங்கள் பலப்படுத்தப்படவும், தீமையிலும், அநீதியிலும் சிக்கித் தவிக்கும் உலகிலிருந்து எங்களை எப்பொழுதும் பரிசுத்தப்படுத்தும். உமது வல்லமை எங்களை விடுவிப்பதாக. இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் -ஏசா.40:31.**

# மே 20 ஞாயிறு, 2018

## பெந்தேகொஸ்தே ஞாயிறு

## தூய ஆவியரே வந்து எங்களை புதுப்பியும்

## Come Holy Spirit Renew us

எசே. 37:1-14 : உயிர்பெற்றெழும்பும் உலர்ந்த எலும்புகள்

அப். 2:1-13 : தூய ஆவியரின் வருகை

யோவான் 16:1-11 : தூய ஆவியர் யார்?

சங்.104:27-35 : தூய ஆவியரால் படைக்கப்பெறும் படைப்பின் மேன்மை

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களின் புதுப்பித்தலுக்கு காரண கர்த்தாவும், தூய ஆவியை தருபவருமாகிய இரக்கமுள்ள கடவுளே, பெந்தேகோஸ்தே நாளில் வாழ்வளிக்கும் ஆவியை தரிசனத்தின் மூலமும், பலத்த காற்றின் மூலமும் அக்கினிமயமான நாவுகள் மூலமும் நீர் எங் களுடைய முன்னோர்களுக்கு வெளிப்படுத்தினதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பெந்தேகோஸ்தே ஜெபத்தால் உம்மோடு நாங்கள் இடைபடவும், உம்முடைய விடுதலையின் வார்த்தை யைத் தொடர்ந்து பறைசாற்றவும், பயமில்லாமல் அன்பிலும், அரவணைப்பிலும், இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழவும் பரிசுத்த ஆவியரின் பலத்தால் நீர் எங்களைத் தொடர்ந்து புதுப்பித் தருளும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன், நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள், இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார் –எசே.37:14.**

## மே 27 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு, திரித்துவ ஞாயிறு

### மூவொரு கடவுளை நாம் வழிபடுகிறோம்

### We Worship the Triune God

ஆதி.1:1-28 : கடவுள் படைப்பாளர்

2 கொரி.13:11-14 : மூவொரு கடவுளின் பெயரால் வாழ்த்து

யோவான் 1:1-8 : வாக்கு மனிதராதல்

சங்.2 : கடவுள் தேர்ந்தெடுத்த அரசர்

**சிறப்பு மன்றாட்டு:**

திரித்துவக் கடவுளே, காணப்படுகிறதும், காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவரை தூய திரித்துவத்தின் மூலம் நாங்கள் அறிந்துகொள்ளுகிறோம். சமீபத்திற்கும் தூரத்திற்கும் நீர் மீட்பர். உமது பரிசுத்த ஆவியின் மூலம் நாங்கள் உம்மை வணங்கவும், உம்முடைய தூய மாட்சிமையை பாடிப் போற்ற வும், பரலோகத்திலுள்ள அனைவரோடும் சேர்ந்து உமது மகிமை யான நாமத்தை தூய, தூய, தூயா என்றும், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கிறது என்றும் போற்றிப்பாட கிருபை செய்யும்படி உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் –யோவான் 1:18.**

## ஜுன் 1, 2018

### தெரிவு செய்தலிலுள்ள ஆசீர்வாதம்

லூக்கா 10:38-42

**மரியாளின் பங்கு**

- தேவையான ஒன்றை தெரிவுசெய்ய வேண்டும்
- விட்டு எடுபடாததை தெரிவு செய்ய வேண்டும்.



**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார் –லூக்கா 10:42.**

# ஜூன் 3 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு

## மாணவர் ஞாயிறு

## பரத்திலிருந்து வரும் ஞானம்

## Wisdom from aobve

1 இரா.3:16-28 : சாலமோனின் ஞானம்

யாக்.1:1-8 : நம்பிக்கையும் ஞானமும்

லூக்.10:21-24 : ஞானிகளுக்கு மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தும் கடவுள்

சங்.119:33-40 : நுண்ணறிவுக்கான வேண்டல்

**சிறப்பு மன்றாட்டு:**

கடவுளே, எல்லா மனிதர்களுடைய அறிவுக்கும், ஞானத்தை தேடுதலுக்கும் நீரே ஊற்றாகவும், வழிகாட்டியாகவும் இருக் கிறீர். உம்மைத் தேடிக் கண்டுபிடிக்கவும், எங்களை நாங்களே ஆராய்ந்து பார்க்கவும், நீர் பரம்பரையாக எங்களுக்குக் கொடுத்த மனதிற்காகவும், ஞானத்திற்காகவும் உம்மைப் போற்றுகிறோம். இவ்வுலகத்திலுள்ள கேடுகளையும், சோதனைகளையும் மேற் கொண்டு ஒரு வெற்றியின் வாழ்க்கையை வாழ எங்களுக்கு வேண்டிய ஞானத்தை நாங்கள் நாட எங்களை ஏவியருளும். நீரே உண்மையான ஞானம், உம்மை தெரிந்து கொள்ளுதலும், உம்மில் நம்பிக்கை வைப்பதலும்தான் ஞானத்தின் முடிவான குறிக்கோள். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்து வின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும்,**

கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது –லூாக்கா 10:21.

# ஜுன் 10 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 3-வது ஞாயிறு
## சுற்றுச்சூழல் ஞாயிறு

## படைப்பு கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகிறது
## Creation Proclaims The Glory of God

நீதி.8:22-31 : படைப்பும் ஞானமும்

வெளி.21:1-8 : புதிய வானம் புதிய பூமி

லூக்.8:22-25 : இயேசுவுக்கு கீழ்ப்படியும் காற்றும் கடலும்

சங்.19 : படைப்பில் கடவுளின் மகிமை

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களைப் படைத்த கடவுளே, ஆச்சரியப்படத்தக்க எண்ணி முடியாத படைப்பின் வெகுமதிகளுக்காக உமக்கு நன்றி சொல்லு கிறோம். உம்மை மகிமைப்படுத்துகிற உம்முடைய படைப்பு களோடு சேர்ந்து உம்முடைய தூய நாமத்தை நாங்கள் போற்று கிறோம். உம்முடைய படைப்பை உண்மையாக பராமரித்துக் கொள்பவர்களாக நீர் எங்களை அழைத்திருக்கிறீர். படைப்பிற்கும் பொறுப்பாளர்களாக இருப்பதில் தவறிவிட்டோம். எல்லாத் தீயவைகளிலிருந்தும் எங்களை புனிதப்படுத்தி நாங்கள் உண் மையும், உத்தமுமான படைப்பாக இருக்கக் கிருபை செய்யும். இயற்கையோடு இணைந்து வாழவும், உம்முடைய படைப்பின் மகிமையை அனுபவிக்கவும் எங்களை ஏவியருளும். இவை களை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது - சங்.19:1.**

## ஜூன் 17 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு

### உண்மையோடும், ஆவியோடும் கடவுளை வழிபடுதல்

Worship in the Lord in Truth and Spirit

| | |
|---|---|
| ஏசா.6:1-8 | : கடவுளின் அழைப்பு பெறும் ஏசாயா |
| 2 தெச.2:13-17 | : மீட்படைய கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் |
| யோவான் 4:15-26 | : இயேசுவிடம் சமாரியப் பெண்ணின் வழிபாடு பற்றிய உரையாடல் |
| சங்.139 | : என்னை முழுமையாய் அறிந்த கடவுள் |

**சிறப்பு மன்றாட்டு:**

என்றென்றும் ஜீவிக்கிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நித்தியமாக நிலைத்திருக்கிற திரியேகத்தின் மகிமையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும், வணங்கவும், எங்கள் பாவ அறிக்கையின் மூலம் நீர் எங்களுக்கு கிருபை அளித்திருக்கிறீர். இந்த நம்பிக்கை யில் நாங்கள் நிலைத்திருக்கவும், உம்மை வழிபடவும், உம் முடைய முடிவில்லா மகிமையை இறுதியில் கண்டுகொள்ளவும் எங்களுக்கு உதவிசெய்யும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே நீங்கள் நிலை கொண்டு, வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள் -2 தெச.2:13,15.**

## ஜுன் 24 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு

### சீஷத்துவத்தின் விலை

### Cost of Discipleship

| | |
|---|---|
| தானி.6:11-23 | : கடவுளின்மீது தளராத நம்பிக்கை கொண்ட தானியேல் |
| 2 கொரி6:1-10 | : எச்சூழ்நிலையிலும் கடவுளின் திருப்பணி |
| மாற்கு 10:35-45 | : இயேசுவின் இருபுறமும் அமர்வதற்கான தகுதி |
| சங்.34 | : கடவுளின் கருணையைப் புகழ்தல் |

**சிறப்பு மன்றாட்டு:**

இயேசுவின் உண்மையான சீடராக இருப்பதினால் வரும் விலையை எடுத்துக்காட்டிய சிறந்த கடவுளே, இயேசுவின் உண்மையான சீடராக எங்கள் அனுதின வாழ்க்கையில் இருப்பதற்கு, எங்களுக்குப் போதியும். உமது வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய எங்கள் மனதை மாற்றியருளும். எங்களுக்குள் ஒரு பணியாளனின் இருதயத்தை உருவாக்கி, உம்முடைய அடிச்சுவடுகளில் எங்கள் சிலுவை சுமக்க எங்களுக்கு அறைகூவல் தாரும். இதன்மூலம் நாங்கள் எங்களுடைய பயங்கள் மற்றும் பெருமைகளிலிருந்து விடுவிக்கப்படவும், உமது பாடுகளின் பாத்திரத்திலிருந்து உம்மோடு சேர்ந்து பானம்பண்ணவும் எங்களைத் தாழ்மைப்படுத்தி, சோதனைகள், துன்பங்களின் மத்தியிலும் எங்களைச் சுற்றியிருக்கும் பிறக்கு நாங்கள் பணியாளராக இருக்கவும் கிருபை செய்யும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

**அப்படியே மனுஷகுமாரனும், ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் -மாற்கு 10:45.**

# ஜுலை 1 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 6-ம் ஞாயிறு

## பொறுப்பாண்மை ஞாயிறு

## பொறுப்பாண்மை: வெளிப்படைத் தன்மையும், கணக்கொப்புவித்தலும்

## Stewardship: Transparency and Accountability

| | | |
|---|---|---|
| யாத்.36:2-7 | : | மோசே காணிக்கைகள் குறித்து காண்பித்த பொறுப்பாண்மை |
| பிலிப்.4:10-20 | : | பிலிப்பியரின் நன்கொடைகளுக்காக நன்றி சொல்லும் பவுல் |
| லூக்.19:11-27 | : | பரலோக ராஜ்யமும் பத்து தாலந்தும் உவமை |
| சங்.116:12-19 | : | கடவுள் செய்த நன்மைகளுக்கு என்ன கைம்மாறு செய்ய? |

**சிறப்பு மன்றாட்டு:**

எல்லா வளங்களுக்கும், காரணக் கர்த்தாவே, நீர் எங்கள்மீது காணப்படவும், காணப்படாததுமான வளங்களைப் பொழிந்து உம்முடைய இராஜ்யத்தை விரிவாக்குவதற்கு கிருபை செய்தீர். எங்கள்மீது வைத்திருக்கிற நம்பிக்கைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பிறருடைய நலனுக்காக எங்களது வளங்களை பொறுப்பாண்மையோடு பகிர எங்களை பெலப்படுத்தும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சிசெய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு –பிலிப்.4:11,13.**

# ஜுலை 8 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 7-ம் ஞாயிறு

## இறையியல் கல்வி ஞாயிறு: பற்றுறுதியை அறிந்து கொள்ளுதலும், செயல்படுத்துதலும்

## Theological Education: Knowing and Doing Faith

| | | |
|---|---|---|
| யாத். 3:1-12 | : | மோசேயை அழைக்கும் விடுதலையின் கடவுள் |
| 2 தீமோ. 2:1-13 | : | இயேசு கிறிஸ்துவின் படை வீரனாக செய்ய வேண்டியவை |
| யோவான் 12:20-26 | : | இயேசுவைக் காண விரும்பிய கிரேக்கர்கள் |
| சங். 111 | : | கடவுளின் செயல்கள் |

**சிறப்பு மன்றாட்டு:**

எல்லாம் வல்ல கடவுளே, இயேசுவின்மூலம் நாங்கள் நித்திய ஜீவன்மேல் பற்றுக்கொள்ளவும், உலக வாழ்க்கையின் மேல் உள்ள பற்றை மேற்கொள்ளவும், கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்து பின்பு பயன்தருவதுபோல, நீர் எங்களை உமது பணியாளராக அழைத்திருக்கிறீர். உம்முடைய பரிசுத்த வார்த்தைகளைப் படித்து, தியானித்து அவைகளைச் சரியாக புரிந்துகொள்ள எங்களுக்கு அறிவையும், ஞானத்தையும் தாரும். இளைஞர்கள் இறையியல் பயிற்சிபெற உம்முடைய வழி நடத்துதலையும், உற்சாகத்தையும் தொடர்ந்து அருளும். இறையியல் கற்கும் மாணவர்களும், இறையியல் ஆசிரியர்களும் விசுவாசம், நீதி, நேர்மை, சமாதானம் இவைகளில் நிலைத்திருக்க உம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்பியருளும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி

செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

## மகிழ்விக்கும் மன்னா:

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்: அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு. அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும் -சங்.111:10.**

## ஜூலை 15 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 8-ம் ஞாயிறு

### இறைமக்கள் உப்பாகவும், ஒளியாகவும் இருப்பர்

### People of God: Salt and light

ஏசா.49:1-7 : கடவுளின் மீட்பையடைய உலக முழுவதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒளி

எபே.5:1-5 : இறைமக்களுக்கு ஏற்ற நடத்தை

மத்.5:13-16 : நீங்களே உலகிற்கு உப்பும் ஒளியுமாம்

சங்.27 : கைவிடாத கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றல்

**சிறப்பு மன்றாட்டு:**

ஒளியின் கடவுளே, நீர் அந்தகாரத்தின் அதிகாரத்தை தகர்த்தெறிந்து, இந்த பூமியை ஒளியால் நிரப்பி, வாழ்வின் ஆதாரமாகவும், உட்பொருளாகவும் உருவாக்குகிற சக்தியாகவும் இருக்கிறீர். இந்த உலகிற்கு ஒளியாக இருக்கும் உமது குமாரனுக்காக நன்றி செலுத்துகிறோம். உம்முடைய நாமம் மகிமைப்படுவதற்காக தொடர்ந்து உம்முடைய ஊழியத்தை செய்து இந்த உலகத்தை ஒரு அர்த்தமும், நோக்கமும் உள்ள உலகமாக மாற்றியமைக்கும் உப்பாகவும், ஒளியாகவும் இருக்கும்படி எங்கள் வாழ்வை மாற்றியருளவேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்,**

**மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது -மத்.5:14.**

# ஜுலை 22 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 9-ம் ஞாயிறு

## அருட்பொழிவு திருப்பணி: கிறிஸ்துவின் காயங்களால் அடையாளப்படுத்தப்படுகின்றது

## Ordained Ministry: Marked by the Wounds of Christ

| | | |
|---|---|---|
| 1 சாமு.22:12-23 | : | தாவீதைக் கண்டுபிடிக்க ஆசாரியர்களை கொலை செய்த சவுல் |
| கலா.6:11-18 | : | புதுப்படைப்பாவதே முக்கியம் |
| யோவான் 21:15-19 | : | பேதுருவுக்கான இயேசுவின் அழைப்பு |
| சங்.56 | : | கடவுள் என் பக்கம் இருக்கிறார் என்ற பற்றுறுதி |

**சிறப்பு மன்றாட்டு:**

எங்கள் கன்மலையும், அடைக்கலமுமான கடவுளே நீர் எங்களுக்கு கொடுத்த சபைக்காக நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மூலம் பரிசுத்த ஆவியாகிய கடவுளால் பெலப்படுத்தப்பட்டு, நடைபெற்று வருகின்ற பலவகையான ஊழியங்களுக்காக உம்மைத் துதிக்கிறோம். உம்மால் அருள் பொழிவு பண்ணப்பட்ட ஊழியர்கள் கடவுளுக்கும் மனிதர்களுக் கும் செய்யும் ஊழியங்களில் விசுவாசத்துடனும் உண்மையுட னும் இருக்க கிருபை செய்யும். இந்த ஊழியர்கள் தாங்கள் செய்யும் எல்லாப் பணிகளிலும் தங்கள் மந்தைகளை வழிநடத்து வதிலும், பாதுகாப்பதிலும் கிறிஸ்துவைப்போல் கவனமாக இருக்க கிருபை செய்யும். இவர்கள் ஊழியம் உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை கொண்டுவரவேண்டும் என்று உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள் கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**தேவனே நான் உமக்குப் பண்ணின பொருத்தனைகள் என்மேல் இருக்கிறது. உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவேன் –சங்.56:12.**

# ஜுலை 29 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 10-ம் ஞாயிறு

## மதிப்பிற்குரிய திருமணம்

## Honour Marriage

மல்.2:11-16 : மணமுறிவை வெறுக்கும் கடவுள்

1 கொரி.13:1-14 : அன்பு ...

மாற்கு 10:2-9 : மணவிலக்கு குறித்து இயேசுவின் விளக்கம்

சங்.45 : அரசரின் திருமணப்பாடல்

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களது பரலோகப் பிதாவே, உம்முடைய நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு திருமணம் என்பதை உண்டாக்கி இவ் வுலகத்தை குடும்பங்களால் ஆசீர்வதித்தீர். எல்லாக் கணவன் மார்களும், மனைவிமார்களும் இயேசு கிறிஸ்துவின் தியாக முள்ள அன்பைப் போற்றி, பணிவோடுகூடிய சந்தோஷத்தோடு வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்துவார்களாக. இவர்கள் தமக் குரிய பாத்திரத்திலேயே பானம்பண்ணி திருமணத்தின் புனிதத் தைப் பாதுகாத்துக்கொள்ளும்படி கடவுளின்மீது பயத்தை அவர் களுக்குப் போதித்தருளும். திருமணத்தின் ஆசீர்வாதங்களை நினைத்து அவர்கள் சந்தோஷப்படும்படி அவர்கள் வாழ்க்கை என்னும் பாத்திரத்தை வியப்பூட்டும் அன்பால் நிரப்பும். இவை களை அன்பைக் காட்டிய ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்து வின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும் முத்தரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய் -உன்.4:12.**

# ஆகஸ்ட்டு 1, 2018

## கடவுளின் பணியாளராய் கடமையைச் செய்வதில் ஆசீர்வாதம் -லூக்.17:7-10.

- கடமையைச் சரியாய்ச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம்.
- எதிர்பார்ப்பின்றி பணிசெய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம்.



**நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார் -லூக்.17:10.**

# ஆகஸ்டு 5 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 11-ம் ஞாயிறு

### அருட்பணி: கடவுளின் பாடுகளை பகிர்தல்

### Mission: Sharing God's pain

ஏசா.6:1-8 : யாரை நான் அனுப்புவேன்? கேட்கும் கடவுள்

அப்.9:10-18 : இயேசுவின் பொருட்டு துன்புற அழைப்பு பெறும் சவுல்

லூக்.10:1-11 : எழுபத்திரண்டு சீடர்களை அனுப்பும் இயேசு

சங்.40:1-13 : ஆண்டவரின் மீட்பையும் நற்செய்தியையும் அறிவித்தல்

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களைப் பெலப்படுத்தும் கடவுளே, உமது இராஜ்ஜியத்தை இவ்வுலகில் நிறுவும் பணியில் தன் ஜீவனையே விட்ட இயேசு கிறிஸ்துவின் புனிதப் பணியில் நாங்களும் சக பயணிகளாக பயணிக்கும்படி எங்களை அழைத்தற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது சீஷர்களைப்போல இந்த ஊழியத்திற் காக எங்களுடைய வாழ்வை அர்ப்பணித்து உம்முடைய படைப்பின் திட்டங்களில் நாங்களும் பங்குபெற எங்களை பெலப் படுத்தவேண்டுமென்று பிராரத்திக்கிறோம். எங்கள் மத்தியில் உமது இராஜ்ஜியம் நிலைநாட்டப்பட இந்த ஊழியத்திலுள்ள வேதனைகளை நாங்கள் மேற்கொள்ள உதவி செய்யும்படி, என்றென்றும் ஆட்சிசெய்கிற இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம் நல்ல கடவுளே!... ஆமென்

மகிழ்விக்கும் மன்னா:

**அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் -லூக்.10:2.**

# ஆகஸ்டு 12 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 12-ம் ஞாயிறு

## திருமுழுக்கு: கிறிஸ்துவோடு மரித்து உயிர்த்தெழுதல்
**Baptism: Dying and Rising up with Christ**

| | |
|---|---|
| ஆதி.7:1-24 | : பெருவெள்ளமும் நோவாவும் |
| ரோமர் 6:1-14 | : திருமுழுக்கால் கிறிஸ்துவோடு இணைதல் |
| யோவான் 12:20-26 | : மண்ணில் உயிர்தர மடியும் கோதுமை மணி |
| சங்.29 | : கடவுளின் குரல் |

**சிறப்பு மன்றாட்டு:**

இரக்கமுள்ள கடவுளே, நாங்கள் உம்முடைய இரக்கத்தை யும், கனிவான அன்பையும் ஏற்றுக்கொள்கிறோம். மரணத் திலிருந்து உயிர் கொடுத்து புதுவாழ்வுக்கென எங்களைத் தூக்கி யெடுத்து இயேசுவோடு எங்களை இணைத்துக்கொள்ள உதவி செய்யும். திருமுழுக்கு என்னும் திருச்சடங்குக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். புதிய உறவுகளுக்கும், புதிய ஒப்புரவாகு தலுக்கும் கிறிஸ்துவோடு நாங்களும் பங்கேற்க எங்களுக்கு உதவுகிற உம்முடைய கிருபையை நாங்கள் சாட்சிபகிர எங் களுக்கு ஞானம் தாரும். இவைகளை என்றென்றும் ஆட்சி செய்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள் –ரோமர் 6:11.**

## ஆகஸ்டு 19 ஞாயிறு, 2018

பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 13-ம் ஞாயிறு

### தூய தியாகமாகிய திருவிருந்து (தூய பலி)

### Sacrament of Holy Qurbana (Holy Secrifice)

| | |
|---|---|
| 2 இரா.4:42-44 | : எலிசாவின் அருஞ்செயல் - மீதமான 20 அப்பம் |
| 1 கொரி.11:23-40 | : இயேசுவின் இராவுணவு குறித்த வழுங்கச் சொற்கள் |
| யோவான் 6:51-59 | : பரத்திலிருந்து வந்த அப்பம் |
| சங்.100 | : கடவுளுக்கு நன்றி |

**சிறப்பு மன்றாட்டு:**

என்றென்றும் வாழும் மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தூயபலியாக தம் மையே தந்த நாங்கள் உமக்கு நன்றி சொல்லி போற்றுகிறோம். நாங்கள் உமது பந்தியில் சேரும்போது இந்த சிலுவையில் மரித்த தியாகத்தை மிக ஆழமான நன்றியோடு நினைத்துப் பார்க்கி றோம். உம்மில் நாங்கள் வைத்திருக்கும் பற்றுறுதிக்கு நீர் புத்து யிர் ஊற்றும்படி தாழ்மையோடு உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம். நாங்கள் உமக்காக வாழும் தியாகமாகவே இருக்க எங்களை உற்சாகப்படுத்தவேண்டுமென்று என்றென்றும் ஆட்சி செய்கிற தூயபலியான இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கி றோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் -1 கொரி.11:28.**

# ஆகஸ்டு 26 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 14-ம் ஞாயிறு

## பன்முகத்தன்மை: பொதுவான மானிடமும் பற்றுறுதி பகிர்தலும்

## Plurality: Common Humanity and Faith Sharing

யோனா 4:1-11 : நினிவே மக்கள் மீதான கடவுளின் கரிசனை

அப்.8:26-40 : எத்தியோப்பிய மந்திரியிடம் நற்செய்தி பகரும் பிலிப்பு

மத்.22:1-4 : திருமண விருந்து உவமை

சங்.82 : கடவுளே எழுந்தருளி நீதியை நிலைநாட்டும்.

**சிறப்பு மன்றாட்டு:**

எல்லாம் வல்ல கடவுளே, நீர் எல்லா மனிதரையும் உம்முடைய சாயலிலே படைத்தீர். பூமியெங்கும் பரவியிருக்கிற மனித வர்க்கத்தை ஒரே மக்களாகப் பார்ப்பதில் உள்ள அழகை மனிதர்கள் உருவாக்கிய தடுப்புச்சுவர்களை அகற்றுவதின் மூலமாகவே நாங்கள் பார்த்து மகிழமுடியும். தேவையில் இருக்கும் எங்களுடைய சகோதர சகோதரிகளோடு நாங்கள் மனித நேயம் கொள்ளுவதில்தான் எங்களது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறோம் என்பதை உணர எங்களுக்கு கிருபை செய்யும். பல்வேறு மதம், கலாச்சாரம், சமுதாய பன்மைத்தன்மை இவைகளுக்கு இடையில் நாங்கள் ஒரே மனித இனமாக வாழ எங்களை வழிநடத்தும். நீதியும், நேர்மையுமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கும்போது, எங்கள் மத நம்பிக்கையை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்வதில் உள்ள அழகை நாங்கள் புரிந்து கொள்ள நீர் எங்களை பெலப்படுத்தும். இவைகளை, எல்லா ஆடு களையும் ஒன்று சேர்க்கும் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார் -யோனா 4:11.**

# செப்டம்பர் 1, 2018

## கடவுளின் குடும்பமானால் ஆசீர்வாதம்

எபேசியர் 1:3-10

**கடவுளின் திட்டமான குடும்பம்**

- கிறிஸ்துவின் வழி தெரிந்தெடுக்கப்பட்டோர்
- கிறிஸ்துவின் வழி கடவுளின் பிள்ளைகளாக்கப்பட்டோர்
- கால நிறைவில் கிறிஸ்துவின் வழி ஒன்றாக்கப்படுவோர்



**தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் –எபே.1:6.**

# செப்டம்பர் 2 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 15-ம் ஞாயிறு

## கல்வி ஞாயிறு: ஆசிர்யர் தினம் - இயேசுவே நல்லாசிரியர்

## Jesus the Guru

| | | |
|---|---|---|
| நீதி.4:1-19 | : | ஞானத்தினால் வரும் நன்மைகள் |
| அப்.22:1-15 | : | பவுலின் அழைப்பு குறித்து பவுல் |
| லூக்.4:31-44 | : | அதிகாரத்தோடு கட்டளையிடும் இயேசு |
| சங்.141 | : | நீதிமான் என்னைக் கனிவோடு தண்டிக்கட்டும் |

**சிறப்பு மன்றாட்டு:**

எங்கள் போதகராகிய கடவுளே, இயேசு கிறிஸ்து எனும் உம்முடைய மகனை நீர் எங்களுக்கு ஒரு ஆசிரியராகவும் நம்பிக்கைக்குரிய ஒரு அறிவூட்டுபவராகவும் தந்தருளினீர். நாங்கள் அவரை தாழ்மையோடு நம்பி எங்கள் ஆசிரியராக ஏற்றுக்கொள்கிறோம். அவர் தன் போதனைக்கு ஏற்ப முன்மாதிரி யான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். எங்கள் தலைவரே, உமது அதிகாரத்துக்கும், போதனைக்கும் நாங்கள் எங்களை சமர்ப்பிக் கிறோம். அக்கறையும், கருணையும், நிறைந்திருக்கிற உம்மு டைய போதனைகளிலுள்ள அர்த்தமுள்ள வாழ்வை நாங்கள் அனுபவிக்க எங்களை வழிநடத்தும். தொடர்ந்து உம்முடைய வழிநடத்துதல்களையும், ஆசீர்வாதங்களையும் தேடிப் பெற்றுக் கொள்ள நாங்கள் தாழ்மையோடு கடந்துவர எங்களுக்கு உதவ வேண்டுமென்று நல்லாசிரியராம் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நான் உங்களுக்கு நற்போதகத்தைத் தருகிறேன்.**
**என் உபதேசத்தை விடாதிருங்கள் -நீதி.4:2.**

# செப்டம்பர் 9 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 16-ம் ஞாயிறு

## கடவுளுடைய மீட்புப் பணியில் பெண் பங்காளர்கள்
## Women Partner in God's Liberative Act

| | |
|---|---|
| யாத்.1:15-22 | : கடவுளின் மீட்புப் பணியில் எபிரேய மருத்துவச்சிகள் |
| ரோமர் 16:1-16 | : பவுலின் அருள்பணியில் இணைந்திருந்த பெண்கள் |
| மாற்கு 15:37-41 | : இயேசுவின் மரணத்தின் போது உடனிருந்த பெண்கள் |
| சங்.148 | : எல்லாரும் கடவுளைப் போற்றுங்கள் |

**சிறப்பு மன்றாட்டு:**

எல்லா வகையான கட்டுகளிலிருந்து விடுதலை கொடுக்கும் எல்லா வல்ல கடவுளே, அடிமைத்தனத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் மக்களை நீர் விடுவிக்க ஆண்களையும், பெண்களையும் உம்மோடு சக ஊழியர்களாக அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இப்பொழுதும் ஆண்டவரே எல்லா இடங்களிலும் சமாதானத்தையும், ஒப்புரவையும் கொண்டுவர உமது சபையில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து தங்களை அர்ப்பணித்துக்கொள்ள நீர் உமது சபையின்மேல் கண்ணோக்கமாய் இரும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**(சிப்பிராள் பூவாள் எபிரேய) மருத்துச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார் -யாத்.1:15,21.**

# செப்டம்பர் 16 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 17-ம் ஞாயிறு

## என் சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்

## My Peace I Give to you

| | |
|---|---|
| சக.8:12-19 | : சமாதானம் பெற இஸ்ரயேலருக்கு கடவுள் கூறும் வழிமுறை |
| ரோமர் 5:1-5 | : கிறிஸ்துமீது கொள்ளும் நம்பிக்கையால் கிடைக்கும் பலன் |
| யோவான் 16:16-23 | : மகிழ்ச்சியாக மாறும் துயரம் |
| சங்.119:161-176 | : கடவுளின் உதவிக்காக மன்றாட்டு |

**சிறப்பு மன்றாட்டு:**

நம்பிக்கையில்லா தன்மையிலிருந்து நம்பிக்கை ஊட்டி, எங்கள் பெலவீனத்தை பெலனாக மாற்றும் எல்லாம் வல்ல கடவுளே, எங்கள் துக்கம் சந்தோசமாக மாறும் என்ற உமது உறுதிமொழிக்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உண்மையையும், சமாதானத்தையும் நேசிக்க உம்முடைய வார்த்தைகளால் எங்களை ஊக்கப்படுத்தும். விரோதத்தாலும், மனவேதனையினாலும் துன்பப்படும் இவ்வுலகில் சமாதானத்தையும், ஒப்புரவையும் உண்டுபண்ணும் கருவிகளாக நாங்கள் மாற உம்முடைய தூய ஆவியால் எங்களுக்கு உதவியருளும். இவைகளை நாங்கள் சமாதானப்பிரபுவாகிய இயேசுகிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு அவர்களுக்கு இடறலில்லை -சங்.119:165.**

# செப்டம்பர் 23 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 18-ம் ஞாயிறு

## வறுமைக்கு கிறிஸ்தவரின் மறுமொழி

## Christian Response to Poverty

ஆமோஸ் 8:4-7 : ஏழைகளை ஒடுக்கிய இஸ்ரயேல் - கடவுளின் தண்டனை

யாக்கோபு 2:1-8 : ஏழைகளை மதித்தல்

லூக்கா 16:19-31 : ஐசுவரியவானும் லாசருவும்

சங்கீதம் 145 : தம்மீது பற்றுக்கொண்ட அனைத்தையும் பராமரிக்கும் கடவுள்

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களைத் தாங்குகிற கடவுளே, நீர் படைப்பை உம்முடைய அளவுநிறைந்த இரக்கத்தாலும், நன்மையாலும், புதுப்பித்து புதுவளம் அடையச்செய்கிறீர். இந்த வளத்தை, தன் அன்பாலும், இரக்கத்தாலும், தன்னையே வெறுமையாக்கிற இயேசு கிறிஸ்துவைப்போல் நாங்களும் பிறரோடு பகிர்ந்துகொள்ளும்படி சமுதாய தேவைகளை கண்டறிய எங்களது மனதையும், இருதயத்தையும் திறக்கவேண்டுமென்று எளிமையாய் வாழ்ந்து காட்டிய ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**உன்னிடத்தில் நீ அன்புகூறுகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள் -யாக் 2:8.**

# செப்டம்பர் 27, 2018

## தென்னிந்தியத் திருச்சபை உருவான நாள்

## வழிபாட்டில் ஒற்றுமை
## Unity in Worship

| | | |
|---|---|---|
| நெகே.2:17-20 | : | வாருங்கள் கட்டுவோம் - நெகேமியா எருசலேம் மதிலைக் கட்டுதல் |
| ரோமர் 8:31-39 | : | கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பது எது? |
| லூக்.9:1-6 | : | இறையாட்சிப் பற்றி பறைசாற்ற அனுப்பப் படும் பன்னிருவர் |
| சங்.66 | : | கடவுள் செய்த செயல்களுக்காக அவருக்கு நன்றி |

**சிறப்பு மன்றாட்டு:**

என்றென்றும் நிலைத்திருக்கும் மகா வல்லமையுள்ள கடவுளே, உம்முடைய தூய ஆவியால் உம்மை விசுவாசிக்கும் முழு கிறிஸ்தவ சமுதாயம் பரிசுத்தப்படுத்தப்பட்டு ஆட்சி செய்யப் படுகிறது. நீர் எங்களுக்கு வெகுமதியாகக் கொடுத்த தென்னிந்திய திருச்சபைக்காக நன்றி செலுத்துகிறோம். சபைகள் உமது தொலை நோக்கை தெளிவாகக் கண்டுகொள்ளவும், அதைப் பிரதிபலிக்க வும் அருள்தாரும். பன்மை தன்மை கொண்ட கிறிஸ்தவ சமய சூழ்நிலையில் தைரியத்தோடு உமக்கு சாட்சி பகரவும், கிறிஸ்தவ நம்பிக்கையிலுள்ள ஒற்றுமையை எங்கள் மூலமாக வெளிக் காட்டவும் எங்களுக்கு உதவும். திரியேகக் கடவுளை நாங்கள் வணங்கும்போது மொழி, பாலினம், நிறம், ஜாதி, இனம் என்ற எங்களது வேற்றுமைப் பாராட்டுதலை சுத்திகரித்து எல்லா புரிதலுக்கும் அப்பாற்பட்ட உம்முடைய அன்பில் நாங்கள் ஒன்று பட உதவிசெய்யும். இவைகளை ஒன்றுபடுத்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்வழி வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

# செப்டம்பர் 30 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு

## முதியோரின் ஞானம்

## Wisdom of the Elderly

| | |
|---|---|
| ஆதி.24:1-14 | : மகனின் திருமணத்திற்காய் ஆயத்தமாகும் ஆபிரகாம் |
| 2 தீமோ.1:3-14 | : பவுலின் அறிவுரை |
| லூக்.1:5-7 | : திருமுழுக்குநர் யோவானின் பெற்றோர்கள் |
| சங்.92 | : முதுமையிலும் கனிதரவைக்கும் ஆண்டவரைப் போற்றுதல் |

**சிறப்பு மன்றாட்டு:**

எங்கள் முற்பிதாக்களின் கடவுளே, எங்களின் வாழ்வின் முன்மாதிரிகளாக அவர்களைத் தந்து அவர்களைக் மதித்து நடக்க கற்றுத்தந்தவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமக்கு முன்பாக தங்கள் வாழ்க்கையிலும் திருப்பணியிலும் குற்றமற்றிருந்த ஆசாரியர் சகரியா போன்றோருக்காகவும் தங்கள் வாழ்க்கையை பிறர் வாழ்வின் ஆசீர்வாதத்திற்காக ஈந்தளித்த பலருக்காகவும் நன்றி செலுத்துகிறோம். அவ்வாழ்க்கை முறையை நாங்களும் பின்பற்ற உமதருள் தாரும். முதியவர்களின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து ஞானத்தைக் கற்றுக்கொள்ளவும் அவர்களை மதித்து நடக்கவும் உம்முடைய வழிநடத்துதலைத் தாரும். சிலுவை மரணம்வரை மூத்தோர்களை மதித்து மாதிரி காண்பித்த எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்வழி வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா

**உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன் -2 தீமோ.1:4.**

# அக்டோபர் 1, 2018

## உலகப்பொருளின் இழப்பில் ஆசீர்வாதம்

மாற்கு 10: 24-31

- ஐசுவரியத்தின் மேலான நம்பிக்கை கடவுளினரசுக்கு ஏற்றதல்ல.
- நற்செய்திக்கான இழப்பில் வரும் மேன்மையும் ஆசீர்வாதமும்.

மகிழ்விக்கும் மன்னா

**இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் -மாற்கு 10:29,30.**

# அக்டோபர் 7 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 20-ம் ஞாயிறு

## திருமக்களின் திருப்பணி

## Ministry of the Laity

| | | |
|---|---|---|
| 1 சாமு.25:14-28 | : | அபிகாயிலின் அறிவான செயல் |
| 1 தெச.4:1-12 | : | கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கை |
| லூக்.10:25-37 | : | நல்ல சமாரியர் உவமை |
| சங்.23 | : | கடவுளே என் ஆயர் |

**சிறப்பு மன்றாட்டு:**

இரக்கமுள்ள கடவுளே, உம்முடைய பிரசன்னத்திற்கும், வல்லமைக்கும் வாய்க்காலாக இருக்க நீர் மக்களை அழைக் கிறீர். உம்முடைய படைப்புகளின்மேல் எப்பொழுதும் இரக்க மாகவே இருக்கிறீர். பாதிக்கப்பட்ட எல்லா மக்களையும் நாங்கள் கண்டுகொள்ளக்கூடிய கண்களையும் துன்பப்படுகிறவர்களு டைய வேதனைக் குரலைக் கேட்கக்கூடிய செவிகளையும், தேவையுள்ள எல்லா சந்தர்ப்பங்களையும், நாங்கள் சந்தித்து சமாதானத்துக்கும், ஒப்புரவாகுதருக்கும் ஏற்ற நற்செய்தியை பரப்பக்கூடிய இருதயத்தை தரவேண்டுமென்று, ஒரே கடவுளின் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம் நல்ல தந்தையே!

மகிழ்விக்கும் மன்னா:

**ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும், எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள் -1 தெச.5:15.**

## அக்டோபர் 14 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு

### மாற்றுத்திறனாளிகளின் சுயமரியாதையும், சார்ந்திருத்தலும்

### Differently Abled: Dignity and Dependences

யாத்.4:10-17 : நாவன்மை அற்ற மோசேயும் விடுதலையாள ராம் கடவுளும்

அப்.3:1-10 : அலங்கார வாசலில் அற்புதம் பெற்றவர்

மத்.17:14-21 : பேய் பிடித்த சிறுவன் குணமாக்கப்படுதல்

சங்.103:1-22 : கடவுளின் பேரன்பு

**சிறப்பு மன்றாட்டு:**

எங்களைப் பெலப்படுத்தும் அதிகாரமுள்ள கடவுளே, நாங்கள் மரணத்தின் நேரத்திலும், உம்மில் வாழ்வைக் காண் கிறோம். எங்களது பலவீனங்களையும், குறைபாடுகளையும் பொறுத்துக்கொள்ள சிலுவையின் அதிகாரத்தின்மூலம் எங் களுக்கு பெலன் தாரும். எங்களுடைய பலவீனத்தில் உம்மு டைய கிருபை எங்களுக்குப்போதும் என்ற நம்பிக்கையில் நாங்கள் ஊன்றி நிற்க எங்களுக்கு உதவவேண்டும் என்று பெலவீனத்தில் கிருபையை அருளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம்.

மகிழ்விக்கும் மன்னா:

**அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான், நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் -அப்.3:8.**

## அக்டோபர் 21 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 22-ம் ஞாயிறு

### அர்த்தமுள்ள வாழ்வைத் தேடும் இளையோர்

### Youth in Search of a Meaningful Life

| | |
|---|---|
| ஆதி.39:1-23 | : கடவுள்மீது பற்றுறுதிகொண்ட யோசேப்பு |
| யோவான் 1:43-51 | : இயேசுவைப் பற்றிய நாத்தான்வேலின் அறிக்கை |
| எபி.12:1-11 | : கண்டித்து திருத்தும் தந்தையாம் கடவுள் |
| சங்.17 | : மாசற்றவனின் மன்றாட்டு |

**சிறப்பு மன்றாட்டு:**

வாழ்வின் கடவுளே, நீர் வாலிபர்களுக்கு படைப்பாற்றலையும், சுறுசுறுப்பையும் அருளி அவர்கள் வாழ்வை வளப்படுத்தியதற்கு நன்றி செலுத்துகிறோம். எல்லா உலகமும் வாழ்வின் புதுமையைக் காணும்படி உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரு வாலிபனாக தன் உயிரை உம்முடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இயேசு கிறிஸ்துவின்மூலம் சமாதானம், சமத்துவம், நீதி உள்ள உலகத்தை உருவாக்க எங்களுக்கு ஞானத்தையும், புரிதலையும் பெலனையும் நல்ல தொலைநோக்கு பார்வையையும் அருளும்படி கேட்டுக் கொள்கிறோம். இவைகளை இளையோராக வாழ்ந்து ஆட்சி செய்கிற ஆண்டவர் கிறிஸ்துவின் வழி வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்: அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய் –1 தீமோ.6:12.**

## அக்டோபர் 28 ஞாயிறு, 2018

### பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 23-ம் ஞாயிறு

### திருச்சபை: சீர்திருத்தப்பட்டதும், சீர்திருத்துவதும்

### Church: Reformed and Reforming

உபா.26:4-11 : எபிரேயரின் விசுவாச அறிக்கை

அப்.2:43-47 : நம்பிக்கை கொண்டோரின் புதிய வாழ்க்கை முறை

மத்.13:33-35 : இறையரசு புளிப்பு மாவுக்கு ஒப்புமைப்படுத்தும் உவமை

சங்.109:21-31 : துன்புற்றவரின் மன்றாட்டு

**சிறப்பு மன்றாட்டு:**

கடவுளே, நீர் படைத்த எல்லாப் படைப்புகளின்மேலும் கருணையுள்ளவராயிருக்கிறீர். உண்மையான கிறிஸ்தவ சாட்சிக்காகவும், இரட்சிப்பின் பாதையை மறுபடியும் கண்டுகொள்ளவும், எங்களது முன்னோர்களுக்கு நீர் கொடுத்த ஞானத்திற்காக நன்றி செலுத்துகிறோம். உம்முடைய இரட்சிப்பின் கிருபையைப் பற்றிய தவறான கொள்கைகளையும், குறுகிற மனப்பாண்மையையும் களைந்தெயவும், நீர் எங்களுக்கு அறைகூவல் விடும்படி கேட்டுக் கொள்கிறோம். இவ்வுலகில் அன்பு சமாதானம் இவைகளுக்கு சீர்திருந்திய பிரதிநிதிகளாக நாங்கள் ஆகும்படி எங்களை மாற்றியருள வேண்டுமென்று சீர்திருத்தும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**நான் சிநேகிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு -வெளி.3:19.**

# நவம்பர் 1, 2018

## கிறிஸ்தவ வாழ்வின் ஆசீர்வாதம்

பிலிப்பியர் 2:1-11

- கிறித்தவ வாழ்வு என்பது கிறிஸ்துவைப் போல் வாழ்வது.
- பிறருக்கானவைகளை நிறைவேற்றும் கிறிஸ்துவின் சிந்தை

**சகல பரிசுத்தவான்களின் நாளுக்கான சிறப்பு மன்றாட்டு:**

கடவுளே, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஆத்தும சரீரத்தில் உம்மை விசுவாசிக்கிற எல்லா மக்களையும், ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒரே சமூகமாக நீர் ஒன்றிணைத்திருக்கிறீர். உம்மை உண்மையோடு நேசிக்கிறவர்களுக்காக நீர் ஏற்பாடுசெய்து வைத்திருக்கிற சொல்லி முடியாத மகிழ்ச்சிக்குள் நாங்கள் வருவதற்காக உம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தவான்களை நாங்கள் விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் பின்பற்ற எங்களுக்கு அருள்தாரும். இவைகளை எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா

**அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது – பிலிப்பியர் 2:4,5.**

# நவம்பர் 4 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 24-ம் ஞாயிறு

## உலக ஞாயிறு பள்ளி தினம் - திருச்சபையில் சிறார்கள்
## Children in the Church

| | |
|---|---|
| யாத்.2:1-10 | : மோசேயின் பிறப்பும் வளர்ப்பும் |
| 3 யோவான் 1-15 | : சத்தியத்தில் நடக்கும் வாழ்க்கையே மகிழ்ச்சி தரும் |
| லூக்.18:15-17 | : சிறுபிள்ளைகளுக்கு ஆசி வழங்கும் இயேசு |
| சங்.47 | : கடவுளே உலகின் அரசர் |

**சிறப்பு மன்றாட்டு:**

சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். இறையரசு அப்படிப்பட்டவர்களுடையது என்று கூறின இரக்கமுள்ள கடவுளே, உம்மை நேசிக்கிறவர்களுக்கு நீர் அருளின சொல்லிமுடியாத மகிழ்ச்சிக்குள் இக்குழந்தைகள் வரும்படி அவர்கள்மேல் இரக்கம் காண்பியும். தாழ்மை, உண்மை, கருணை, அன்பு இவைகளைப் பின்பற்றும்படி அவர்களுக்கு முன்மாதிரிகளை உருவாக்க எங்கள் சபைக்கு உதவி செய்யும். இவைகளை தன் பிதாவிற்கு கீழ்படிந்து பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்டு இரட்சிப்பை எங்களுக்கு அளித்த இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம் ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை**

**-3 யோவான் 1:4.**

# நவம்பர் 11 ஞாயிறு, 2018

பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 25-ம் ஞாயிறு

## விளக்குத் தண்டின் மேல் வைக்கப்பட்ட விளக்கு

## (ஐக்கிய ஞாயிறு)

## Light on the Lamp Stands

| | | |
|---|---|---|
| சக. 4:1-14 | : | விளக்குத் தண்டின் விளக்கம் |
| 1 கொரி. 3:10-15 | : | அடித்தளமாகிய இயேசுவின் மேல் கட்டும் கலைஞர்கள் |
| மத். 5:14-16 | : | விளக்குத் தண்டின் வழியாகத் தரும் பாடம் |
| சங். 27 | : | கடவுள் மீதான நம்பிக்கையும் அதன் பயனும் |

**சிறப்பு மன்றாட்டு:**

ஒளியின் கடவுளே, உலகின் இருளை அகற்ற வந்த ஒளியாகிய இயேசு கிறிஸ்துவுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் எங்களுக்கு அளித்த படைப்பின் பலவகைகளுக்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். நாங்கள் ஒரே மேய்ப்பனைப் பின் பற்றும் ஒரே மந்தையாக இருக்கிறோம் என்பதை நம்பி உறுதிப் படுத்துகிறோம். எல்லாக் கண்ணோட்டத்திலும் காணப்படுகிற எல்லா வேறுபாடுகளையும் போற்றிப் பாராட்ட எங்களுக்கு மன வலிமையைத் தாரும். படைப்பின் வேறுபாடுகள் எங்கள் ஐக்கிய உறவை அதிகரிப்பதற்காக, எந்த இருளும் எங்களை அடக்கி ஆளாதிருப்பதாக. இருளை அகற்கும் கருவிகளாகவும், தண் டின்மேல் இருக்கும் விளக்குகளாக எங்களை இருக்கச் செய்ய வேண்டுமென்று ஒளியாய் வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

**இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது –மத்தேயு 5:16.**

# நவம்பர் 18 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 26-ம் ஞாயிறு

## பெண்குழந்தைகளைப் பாதுகாத்தல்

(பெண்குழந்தைகளின் ஞாயிறு)

## Protecting the Girl Child

யோபு 42:10-17 : உரிமை பெற்றிருந்த யோபின் பெண் பிள்ளைகள்

அப்.16:16-18 : குறிசொல்லும் ஆவியுடைய பெண்ணின் விடுதலை

மத்.15:21-28 : கானானியப் பெண்ணின் நம்பிக்கை

சங்.45:8-14 : அரசரின் திருமணப்பாடல் - அரசியின் தன்மைகள்

**சிறப்பு மன்றாட்டு:**

படைப்பின் கடவுளே, நீர் எங்களை ஆணும், பெண்ணுமாக உம்முடைய சாயலில் படைத்தீர். எங்கள் சமுதாயத்திலும், சபைகளிலும் வீடுகளிலும் உள்ள எல்லாப் பெண்குழந்தைகளுக் காகவும் நன்றி செலுத்துகிறோம். பாலியல் தொல்லை, தொடர்ந்து துன்புறுத்தப்படுதல், குழந்தைத் தொழில் கொடுமை இவைகளால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்காக உம்மிடத்தில் ஜெபிக்கி றோம். கருக்கொலை மற்றும் சிசுக்கொலை போன்ற கொடும் தீமைகளை எதிர்த்துப் போராட எங்களுக்குத் தைரியத்தைக் கொடும். எங்களைச் சுற்றி வாழும் பெண்குழந்தைகளை மதிக் கவும், கனப்படுத்தவும், பாதுகாக்கவும், அதன்மூலம் நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கவும், எங்களுக்கு பலன் தாரும். இவைகளை பெண்களுக்கு மதிப்பளித்த எங்கள் ஆண்ட வர் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக ஸ்திரியே, உன் விசுவாசம் பெரியது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள் -மத்தேயு 15:28.**

# நவம்பர் 25 ஞாயிறு, 2018

## பெந்தேகோஸ்தே நாளுக்குப் பின்வரும் 27-ம் ஞாயிறு

## ஆண்டவரின் வருகைக்காக ஜெபத்தோடு காத்திருத்தல்
## Waiting Prayerfully for the Coming of the Lord

மல்.4:1-6 : ஆண்டவரின் நாள்

2 தெச.2:1-17 : கிறிஸ்துவின் வருகை குறித்த அறிவுரை

மத்.25:1-13 : மணவாளனுக்காக காத்திருந்த கன்னியர் உவமை

சங்.121 : நம்மைப் பாதுகாக்கும் ஆண்டவர்

**சிறப்பு மன்றாட்டு:**

அனைத்து ஆற்றலும் பொருந்திய கடவுளே, ஆண்டவரது வருகைக்காக ஜெபத்தோடு காத்திருக்க உமது திருமைந்தரின் வழியாக எங்களை அழைத்தவரே. உம்முடைய வார்த்தை களின் வழியாக எங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள எங்களுக்கு உதவிபுரியும். எங்கள் ஆண்டவரை எதிர்கொள்ளும் வகையில் சரியான வாழ்க்கை முறையையும் உமது அழைப் புக்கேற்ற வாழ்க்கை முறையையும் கொண்டிருக்க உமது ஆற் றலைத் தாரும். எங்களை அழைக்கவரும் எங்கள் ஆண்டவரா கிய இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம்.. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா

**இதோ சீக்கிரமாய் வருகிறேன்: அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது -வெளி.22:12.**

## டிசம்பர் 1, 2018

**பகிர்தலின் ஆசீர்வாதம்** -கலா.6:1-10.

- ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து
- பகிர்தலுக்கு நேராய் வழிநடத்தும் சுயஆய்வு
- நித்திய ஜுவனை அறுவடை செய்கிறவர்களாக செயல்பட வேண்டும்.

(அல்லது)

லூாக்கா 14:8-14

**விருந்து பண்ணும்போது செய்ய வேண்டியவை**

- பதில் எதிர்பாரா உதவி
- உதவி செய்ய வேண்டியவர்கள்



**நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் -கலா.6:9.**

# டிசம்பர் 2 ஞாயிறு, 2018

## வருகையின் முதல் ஞாயிறு

## நற்செய்தியின் கொண்டாட்டம்

(மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்)

**Celebrating the Good News**

யாத்.2:1-10 : மோசேயின் பிறப்பும் வளர்ப்பும்

அப்.9:10-18 : சவுலுக்காக அனனியாவைச் சந்திக்கும் ஆண்டவர்

லூக்.1:46-55 : மரியாளின் பாடல்

சங்.117 : ஆண்டவரைப் போற்றுங்கள்

**சிறப்பு மன்றாட்டு:**

வறுமைக் கொடுமையிலும், வெறுப்பிலும் வன்முறையிலும் மூழ்கிக் கிடக்கும் உலகிற்கு இயேசுகிறிஸ்துவை நற்செய்தியாக அனுப்பிய புகழ்ச்சிக்குரிய எங்கள் கடவுளே, ஏங்கிக் கிடக்கிற எல்லாருடைய வாழ்க்கையும் உம்முடைய பிறப்பின் நற்செய்தி யின் மூலம் வளப்படும்போது நீர் மகிழ்ச்சி சமாதானம், சந்தோ ஷம் இவைகளை எல்லாத் துன்பங்களின் மத்தியிலும் அளிக் கிறீர். எனவே இவைகளைச் செய்கிற கிறிஸ்து இயேசுவின் வல் லமையை நாங்கள் புகழ்பாடிக் கொண்டாடும்படி எங்களுக்கு கிருபை செய்யும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்து வின்மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது -லூக்.1:46-47.**

## டிசம்பர் 9 ஞாயிறு, 2018

### வருகையின் 2-ம் ஞாயிறு - திருமறை ஞாயிறு

### கடவுளின் திருவார்த்தை: உந்துதல் செய்ய உந்தப்பட்டது

### Word of God: Inspired to Inspire

1 இரா.19:1-21 : எலியாவிற்கு கடவுளின் வார்த்தை தந்த பணிகள்

வெளி.10:1-11 : வாயில் இனித்து வயிற்றில் கசந்த வார்த்தை

லூக்.1:39-45 : மரியாளை உந்தித்தள்ளிய கடவுளின் வார்த்தை

சங்.119:33-40 : கடவுளின் வார்த்தைகள் காட்டும் வழி

**சிறப்பு மன்றாட்டு:**

எங்கள் வாழ்க்கைக்கு காரணக் கர்த்தாவாகிய எல்லாம் வல்ல கடவுளே, வார்த்தை கடவுளாயிருந்த இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறோம். முன்பு நீர் உமது மக்களாகிய எமது முன்னோர்களோடும் தீர்க்கதரிசிகளோடும் இறுதியில் உமது குமாரன் மூலமாகவும் எங்களோடு பேசினீர். உமது வார்த்தை அண்ட சாராசரங்களில் ஒழுக்கத்தை உருவாக்கக்கூடிய அதிகாரத்தைப் படைத்தது. உம்முடைய வார்த்தையினால் ஆவிக்குரிய உந்துதல் பெறவும், பிறரை ஆவிக்குரிய உந்துதலுக்குள் கொண்டுவரவும் எங்கள் இருதயங்களை உடைத்து சீர்திருத்தி அமைக்கும்படி என்றும் எங்களை உந்தித்தள்ளும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிது -சங்.19:7.**

# டிசம்பர் 16 ஞாயிறு, 2018

## வருகையின் 3-ம் ஞாயிறு

## பாவக்கட்டிலிருந்து விடுதலை
## Deliverance from the bondage of Sin

| | |
|---|---|
| யாத்.14:1-14 | : செங்கடல் முன்அடிமைப்பட்டிருந்த மக்களுக்காக போரிடும் கடவுள் |
| ரோமர் 8:1-11 | : வாழ்வருளும் ஆவியர் தரும் விடுதலை |
| யோவான் 8:31-38 | : சத்தியம் உங்களை விடுதலையாக்கும் |
| சங்.37:1-12 | : தீமை செய்வோரைப் பாராமல் ஆண்டவரை மட்டுமே பார்த்தல் |

**சிறப்பு மன்றாட்டு:**

உண்மையும் நீதியுமுள்ள கடவுளே, நீர் இவ்வுலகை விடுவிக்க வல்லமையுள்ளவர். உம்முடைய மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் பாவக்கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற்றிருக்கிறோம். உம்மைப் பின்பற்றுகிறவர்களாகவும், உண்மையை கடைபிடிக்கவும் எல்லாப் பாவக்கட்டுகளிலிருந்து விடுதலையாகும்படியும் உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி விடுதலையின் நற்செய்தியை பிறருக்கு பிரசங்கிக்க எங்களுடைய இருதயங்களை ஏவும். இவைகளை உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற ஒரே கடவுளின் மகன் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் -ரோமர் 8:6.**

# டிசம்பர் 23 ஞாயிறு, 2018

## வருகையின் 4-ம் ஞாயிறு

## மாரநாதா ஆண்டவரே வாரும்

## Maranatha O Lord Come

உபா.18:15-22 : இறைவாக்கு குறித்த உறுதி மொழி

1 கொரி.16:13-24 : அறிவுரைகளும் வாழ்த்தும்

யோவான் 1:1-14 : வார்த்தை மனிதரானது

சங்.28 : மன்றாட்டுக்கு கடவுள் செவி சாய்ப்பார்

**சிறப்பு மன்றாட்டு:**

இரக்கத்தின் கடவுளே, வாழ்வோரையும் இறந்தோரையும் உம்முடைய எல்லா மகிமையோடும் நீர் வந்து நியாயந்தீர்ப்பீர் என்ற உமது வாக்குக்கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறோம். எங்கள் மத்தியில் உமது சத்தத்தை அடையாளம் கண்டுகொள்ள எங்களுக்கு உதவும் உம்முடைய முழுமையிலிருந்து நீர் எங்களுக்கு அளித்த இரக்கத்தை செயல்படச் செய்யும். உம்முடைய வருகைக்காக விழிப்போடு காத்திருக்கவும், எல்லாவற்றையும் அன்போடு செய்யவும் எங்கள் விலாசத்தில் நாங்கள் தரித்திருக்கவும் உமது நம்பிக்கையாலும், உமது உண்மையாலும் எங்களை நிரப்பும். வார்த்தை மாம்சமாகி எங்களோடு வாசம்செய்து மறுபடியும் மகிமையோடு வந்து, உம்மோடும் தூய ஆவியரோடும் அரசாட்சி செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணிய இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள் –1 கொரி16:13.**

# டிசம்பர் 25 ஞாயிறு, 2018

## கிறிஸ்துவின் பிறப்பு, ஒரு புது உதயம்
## Christmas a New Dawn

ஏசா.9:1-7 : வரவிருக்கும் அரசர்

கலா.4:1-7 : மகனின் ஆவியைப் பெறும் மீட்படைந்தோர்

லூக்.2:1-14 : இயேசுவின் பிறப்பும் மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதலும்

சங்.98 : நீதியுள்ள கடவுளைப் போற்றிடுங்கள்

**சிறப்பு மன்றாட்டு:**

இம்மானுவேலரே, காலத்தின் முழுமையில் உம்முடைய ஒரேபேறான குமாரனை உலகிற்கு அனுப்பி எங்களோடு உண்மையோடும், கிருபையோடும் இருக்கச் செய்தீர். உம்முடைய வெளிப்பாடுகளை நாங்கள் பெற உம்முடைய அருள் பிரகாசத்தால் எங்களைச் சுத்திகரியும். உமது அன்பின் வாய்க்கால்களாக நாங்கள் இருக்க எங்களை ஊக்குவியும். பூமியிலுள்ள எல்லா மக்களுக்கும் நற்செய்தி கூறவும், நாங்கள் உம்முடைய பிள்ளைகளாக இருப்பதின் சந்தோஷத்தை அனுபவிக்கவும், மகிழ்ச்சியின் புதுப்பாட்டை பாடவும், கிருபை செய்யும்படி இம்மானுவேலராகிய இயேசு கிறிஸ்துவின் வழி வேண்டிக்கொள்கிறோம் எங்கள் கடவுளே. ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா

**மீதியானியரின் நாளில் நடந்ததுபோல அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும் அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர் -ஏசா.9:4.**

# டிசம்பர் 30 ஞாயிறு, 2018

## குடும்பம் சுகமளிக்கும் இடம் (குடும்ப ஞாயிறு)
## Family as Healing Space

ஆதி.33:1-11 : ஏற்றுக்கொள்ளும் ஏசா

எபே.6:1-9 : கிறித்தவக் குடும்பத்தின் தன்மைகள்

லூக்.15:11-24 : காணமற்போன மகனும் ஏற்றுக்கொள்ளும் தந்தையும் உவமை

சங்.91 : கடவுள் பாதுகாப்பவர் - கடவுளின் பாதுகாப்பு

**சிறப்பு மன்றாட்டு:**

மானிட வர்க்கத்திற்கு குடும்பம் என்ற வெகுமதியை அருளிச் செய்த இரக்கமுள்ள கடவுளே, ஒருவருக்கொருவர் அன்பும், இரக்கமும் காண்பிக்கும் குடும்ப வாழ்க்கையை தொடர்ந்து குடும்பம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, சீரமைத்து கொடுத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். தன்னைத்தானே தியாகம்செய்து இந்த பூமியில் வாழ்ந்த வாழ்க்கையின்மூலம் இயேசு கிறிஸ்து எமக்கு கற்பித்தபடி குடும்ப வாழ்க்கையில் நாங்கள், பகிர்ந்துகொள்ளுதல், அன்பு காண்பித்தல், கனம் பண்ணுதல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்கிறோம். நீர் எங்களுக்கு தொடர்ந்து காண்பிக்கும் மகிழ்ச்சி, இரக்கம், மன்னிப்பு இவைகளை நாங்கள் அனுபவிக்க எங்கள் குடும்பங்களில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும், குடும்பங்களை ஒரு சுகமளிக்கும் இடமாகவும் உருவாக்க கிருபை செய்யும். இவைகளை எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

மகிழ்விக்கும் மன்னா:

**என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள் –லூக்.15:24.**

## LITURGICAL COLOURS - 2018

| | |
|---|---|
| December 24 evening to January 6 | White |
| January 7 to February 13 | Green |
| February 14 to March 31 | Purple |
| April 1 to May 19 | White |
| May 20 to May 26 | Red |
| May 27 | White |
| May 28 to December 1 | Green |
| December 2 to December 24 Morning | Purple |

**Note:**

This note is added to help those congregations who use Liturgical colours.

**White** is the colour for the festival periods from Christmas Eve to the festival of Epiphany, from Easter day to the eve of Pentecost, and for Trinity Sunday. It is also used for marriages, thanksgiving services, harvest festivals, the feast of dedication of a church and for feasts commemorating saints. White is suitable for baptism, confirmation and ordination, though red may be preferred.

**Red** is used on the feast of Pentecost, and during the week between Pentecost, and Trinity Sunday. It is used on All Saints' day and for the feasts of those saints venerated as martyrs. It is appropriate for any service which focuses on the gift of the Holy Spirit, and is therefore suitable for baptism, confirmation and ordination.

**Purple** is the colour for Advent season and Lenten season and is therefore used from the first Sunday in Advent to the fourth Sunday in Advent; from Ash Wednesday until Holy Saturday. However, white may be preferred at holy communion service on Maundy Thursday. Purple is recommended for funerals and for the commemoration of the faithful departed, although either black or white may also be used. White is preferred at the funeral of a child.

**Green** is the colour for ordinary Sundays. It is used between Epiphany and Ash Wednesday, and between Trinity Sunday and Advent Sunday.

**Orange / Saffron** CSI Episcopacy has instituted Orange/Saffron Hand bands and stolls for its Bishops. Orange is colour of India & it is on the top of the Indian Flag symbolizing Indian spirituality of Prayer, Meditation, Sacrifice, Selflessness and Commitment. The CSI Episcopal vestments do not change the colours through out the year, for Episcopacy stands for continuity of Pastoral Leadership, Solemnity & Dignity of Liturgical continuance and perpetual Theological reflection and commitment to God and to His Word and to His Church.